வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 06.10.2022 வியாழக்கிழமை | இதழ் : 301 | பக்கங்கள் : 16

## நல்லிணக்கம், அதிகார பகிர்வை இலங்கை உறுதி செய்யவேண்டும்!

### தீர்மான வரைவு வெளியானது
### இன்று வாக்கெடுப்பு நடக்கும்
### எதிர்ப்பதற்கு இலங்கை முடிவு



ஜெனிவா, ஒக்ரோபர் 06

இலங்கையில் நடந்தவற்றுக்கு உள்நாட்டு பொறிமுறை மூலம் தீர்வு காணவும், அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தியும் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கோர் நாடுகள் 'இலங்கையின் நல்லிணக்க முன்னேற்றம்' என்ற தலைப்பில் 19 அம்சங்கள் கொண்ட வரைவு தீர்மானத்தை வெளியிட்டுள்ளன.

15

## உள்விவகாரத்தில் தேவையின்றி ஜெனிவா தலையீடு செய்கின்றது

### வெளிவிவகார அமைச்சர் காட்டம்



ஜெனிவா, ஒக்ரோபர் 06

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நாட்டின் உள்விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுகிறது என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜெனிவா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் மெய்நிகர்வழியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

15

## கொட்டடி விபத்தில் இளைஞர் மரணம்!

யாழ்ப்பாணம், ஒக். 06

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நகரை அண்மித்த கொட்டடி - லைடன் சந்திப் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை 4 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த றொபிக்ஷன் (வயது -22) என்ற இளைஞரே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-3)





### முல்லைத்தீவில் பெரும் பதற்றம்

## கண்ணீர் புகைக் குண்டு வீசி போராட்டக்காரர்கள் கலைப்பு

- படகை எரித்து மீனவர்கள் எதிர்ப்பு
- ஏட்டிக்கு போட்டியாகவும் போராட்டம்

முல்லைத்தீவு, ஒக். 06

முல்லைத்தீவில் சுருக்குவலை தொழிலை எதிர்க்கும் மீனவர்களும் சுருக்குவலை தொழிலில் ஈடுபடும் மீனவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக நடத்தும் போராட்டத்தில் நேற்று வன்முறை வெடிக்கப் பார்த்தது. இதையடுத்து அவர்கள்மீது கண்ணீர்புகைக் குண்டுகளை வீசி பொலிஸார் போராட்டக்காரர்களை கலைத்தனர்.

இதேவேளை, சுருக்குவலை தொழிலுக்கு எதிராகப் போராட்டத்தை நடத்தி வரும் மீனவர்கள் நேற்றைய தினம் தமது படகு ஒன்றை தீயிட்டு எரித்தும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

15

## மகாவலி வலயம் என்ற பெயரில் வடக்கில் காணிகள் அபகரிப்பு!

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி.

கொழும்பு, ஒக். 06

மகாவலி வலயம் என்ற பெயரில் வடக்கில் நிலங்களை தந்திரமாக அபகரிக்கும் செயல்பாடுகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், அப்பகுதியில் பூர்வீகமாக வாழும் மக்களுக்கு உரிய காணிகள் முறையாக வழங்கப்படவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற நிலையியல் கட்டளைகள் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

15

## 22ஆம் திருத்த சட்ட மூலம் இன்று பாராளுமன்றத்தில்!

### இரு நாட்கள் விவாதம்

கொழும்பு, ஒக். 06

22ஆம் திருத்தச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிப்பதற்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், இதன்மீது இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் பாராளுமன்றில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நீதி மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்

15



## பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும்!

### கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, ஒக். 06

தற்போதைய பாராளுமன்றம் மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கவில்லை. இந்தப் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

15

## 77 சிறுவர்கள் உட்பட 3500 எயிட்ஸ் நோயாளர்!

### கடந்த 10 மாதங்களில் அடையாளம்

கொழும்பு, ஒக். 06

நாட்டில் கடந்த 10 மாதங்களில் சுமார் 3500 எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 77 பேர் சிறுவர்களாவர் என்று எயிட்ஸ் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த வருடத்திலேயே அதிகளவிலான எயிட்ஸ் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அது தெரிவித்துள்ளது

இதேவேளை, சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் பதுளையில் 40 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில், 25பேர் எல்ல பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.



விஜயதசமி தினமான நேற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலயத்தில் மானம்பூ திருவிழா இடம்பெற்றபோது...!

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது…!

நண்பர் ஒருவர் காலையில் தொலைபேசியில் அழைப்பில் வந்தார். லண்டனிலிருந்து அவர் அழைத்தபோது அங்கு அதிகாலை நேரம்.

என்ன இந்த நேரத்திலும் என்று கேட்டேன். உங்களோடு பேசுவதற்காகத்தான் என்றார்.

இலங்கையில் இருந்தபோது கொழும்பில் பத்திரிகை ஒன்றில் பணியாற்றியவர் அவர். ரணில் விக்கிரமசிங்க கல்வி அமைச்சராக இருந்தபோதிருந்து அவரை அறிந்தவர்.

என்னைக் கேட்டார், ‘பாராளுமன்றத்தில் இப்போது ரணில் தரப்பில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?’ என்று.

அவர் தரப்பில் என்றால், அதுதான் முழு உலகத்துக்கும் தெரியுமே என்றேன்.

நீங்கள் சொல்கின்ற அந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் பற்றி நான் கேட்கவில்லை. அவருக்கு எத்தனை பேர் இப்போது பாராளுமன்றத்தில் ஆதரவு வழங்குகின்றார்கள்? என்று திரும்பக்கேட்டார்.

அதுதான் அவர் ஜனாதிபதியாக போட்டியிட்டபோது நூற்றி முப்பத்தி ஐந்து பேர் அவருக்கு ஆதரவாக வாக்களித்திருந்தார்களே? என்றேன்.

அது அவருக்கு ஆதரவளித்ததாக சொல்லப்படும் எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சேர்த்துத்தான் கேட்கிறார் என்ற நினைப்பில் அப்படி சொன்னேன்.

அது எல்லாம், இரகசிய வாக்கெடுப்பு நடந்தபோது. இப்போது பகிரங்கமாக வாக்கெடுப்பு நடந்தால் எத்தனை பேர் அவருக்கு வாக்களிப்பார்கள் என்று கேட்டார்.

ஏதோ அங்கும் இங்கும் கிடைக்கின்ற தகவல்களை இந்தப் பத்தியில் எழுதப்போய், மனுசன் ஏதோ அங்கே நடப்பதெல்லாம் எனக்கு தெரியும் என்பதுபோல பேசுவது எனக்கு புரிந்தது.

அவர் விரும்பாவிட்டாலும் பொதுஜனபெரமுன கேட்கின்ற எல்லோரையும் இராஜாங்க அமைச்சராக நியமித்தபோதே நமக்குத் தெரியும்தானே அவர் என்ன நிலையில் இருக்கின்றார் என்பது.

பாராளுமன்றத்தை கலைக்கின்ற அதிகாரம் அவர் கையில் வரும்வரை அவர் பொதுஜன முன்னணியின் பணயக் கைதி நிலையில்தானே தொடரவேண்டும்? அடுத்த மார்ச் மாதத்தில்தான் பாராளுமன்றத்தைக் கலைக்கக்கூடிய அதிகாரம் அவர் கைக்கு வரும். அதுவரை அவர் கத்தி மீது நடந்து கொண்டுதான் இருக்கவேண்டும் என்பது பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தது வாகசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ரணில் பிரதமராக இருந்தபோது நல்லாட்சி அரசாங்கத்தில் கொண்டுவந்த பத்தொன்பதாவது அரசியலமைப்பு திருத்தத்தில் பாராளுமன்றத்தை கலைக்கின்ற அதிகாரத்தை தேர்தல் நடைபெற்று நான்கரை ஆண்டுகளின் பின்னரே கலைக்க முடியும் என்று மாற்றியவர் ரணில். அதனையே இரண்டரை வருடங்களாக மாற்றினார் கோட்டாபய, தனது இருபதாவது திருத்தத்தில்.

இப்போது, இன்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு கொண்டு வரப்படும் இருபத்திரெண்டாவது திருத்தத்தில் அது அப்படியே இரண்டரை ஆண்டுகளாகவே இருக்கின்றது.

இதனையே மீண்டும் நான்கரை ஆண்டுகளாக மாற்றவேண்டும் என்று பொதுஜனபெரமுன கட்சியினர் சிலர் கோரி வருகின்றனர்.

அப்படி மாற்றவில்லை என்றால் ரணில் பாராளுமன்றத்தை தான் விரும்பியவாறு கலைத்து விடுவார் என்பது அவர்களின் கவலை. அதைவிட, கலைத்துவிடுவேன் என்று மிரட்டியே தனது அலுவல்களை செய்துமுடிப்பார் என்பது பொதுஜன பெரமுனவின் ‘தலை’யின் கவலை. எங்கே ரணிலை தான் விரும்பியதையெல்லாம் செய்விக்க முடியாமல் போய்விடுமே என்பது அவரின் கவலை.

ரணிலைப் பொறுத்தவரை கோட்டாபய கொண்டுவந்த இருபதாவது திருத்தமே தொடர்ந்தாலும் பரவாயில்லை என்ற நிலை. ஆனால், உலகத்துக்கு தான் தனது அதிகாரங்களையே விட்டுக்கொடுக்க விரும்புகின்றேன் என்று காட்டுவதற்காகவாவது இந்த திருத்தத்தைக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும். ஆனால், பாராளுமன்றத்தில் அதனை நிறைவேற்ற முடியாவிட்டால் அது அவருக்கு எந்த பின்னடைவையும் தரப்போவதில்லை.

அதனால்தான், இப்போது பொதுஜன முன்னணியிலேயே ஒரு முப்பது பேர், நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்யக்கூடாது என்று புதிதாக கோஷம் எழுப்பத் தொடங்கியிருக்கின்றனர்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண வேண்டுமானால் நிறைவேற்று ஜனாதிபதி முறை இருக்கவேண்டும் என்று அந்த முப்பது பேரும் இப்போது குரல்கொடுக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

அதாவது ரணிலின் விருப்பத்துக்கு இப்போது பொதுஜன பெரமுனவிலேயே முப்பது பேர் அவருக்கு ஆதரவாக மாறியிருக்கின்றனர். அதாவது இப்போது ரணிலுக்கு பாராளுமன்றத்தில் முப்பது பேர் முழு ஆதரவோடு இருப்பது தெரியவில்லையா என்று கேட்டார் அந்த நண்பர்.

இப்போதுதான் அவர் எதைச் சொல்ல வருகிறார் என்பது புரிந்தது.

அப்ப, பாராளுமன்றத்தில் நாளை நடக்கின்ற வாக்கெடுப்பில் இருபத்திரெண்டாவது திருத்தம் நிறைவேறாது எண்டதைத்தானே சொல்ல வாறியள் என்று அப்புக்குட்டியர் ஸ்ரைலில் கேட்கத்தான் முடிந்தது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க ரணில் முயன்று கொண்டிருக்கிறாரோ இல்லையோ, ஒவ்வொரு கட்சியையும் பலவீனப்படுத்துவதில் கவனமாகத்தான் இருக்கிறார் என்பது மட்டும் புரிந்தது.!

- ஊர்க்குருவி

## மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை நிராகரிக்கிறோம்!

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்!

யாழ்ப்பாணம், ஒக். 06

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் இலங்கை மீதான தீர்மானத்தை நிராகரிக்கின்றோம் என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான தற்போது முன்வைக்கப்பட்டுள்ள நியாயமற்ற தீர்மானத்தை முற்றாக நிராகரிப்பதற்கான எமது முடிவை வெளிப்படுத்தும் வகையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தைச் சேர்ந்த நாங்கள் இந்த ஊடக அறிக்கையை வெளியிடுகின்றோம். ஏனெனில், இந்தத் தீர்மானமானது தமிழர் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளையும் கொடுமைகளையும் ஊக்குவிக்கும் விதமாகவே அமைந்துள்ளது.

தமிழர்களான நாம் பல்லாண்டு காலமாக மிகப்பெரும் இழப்புகளையும் அழிவுகளையும் சந்தித்துள்ளோம். இந்தத் தீர்மானமானத்தினூடாக ஆகக்குறைந்தது நீதியாவது கிடைக்கும் என்று நம்பியிருந்தோம். ஆனால், இந்தத் தீர்மானத்தால் எங்களின் நம்பிக்கை பொய்த்துப் போயுள்ளது. இந்தத் தீர்மானம், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்கள் பற்றிய எந்த புரிதலையும் வெளிப்படுத்தவில்லை. ஆகக்குறைந்தது தமிழ் மக்கள் எதிர்கொண்ட துன்பங்கள், வேதனைகளை கூட பிரதிபலிக்கவில்லை.

இந்தத் தீர்மானம் பல தசாப்தங்களாக தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்களினால் தமிழர்கள் எதிர்கொண்ட கொடுமைகளுக்குத் தீர்வு வழங்கத் தவறிவிட்டது. இந்தத் தீர்மானம் குற்றம் இழைத்தவர்களை பொறுப்பு கூறவைப்பதற்குப் பதிலாக, அவர்களின் சர்வதேச குற்றங்களை வெள்ளை அடிப்பதுடன் அவர்களை பிணை எடுப்பதாகவே அமைத்துள்ளது.

தமது குற்றங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தேவை இல்லை, தாம் தண்டனைக்கு உட்படுத்தப்படமாட்டோம் என உணரும் தமிழர் தாயகம் எங்கும் ஆக்கிரமித்து நிற்கும் அரச படையினர், எதிர்காலத்திலும் தமிழர்களுக்கு எதிராக அட்டூழியங்களைத் தயக்கமின்றி மேற்கொள்வதற்கு, இத்தீர்மானம் வழி ஏற்படுத்தியுள்ளது.

ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்று குவித்த, ஆயிரக்கணக்கான தமிழரை காணாமல் ஆக்கிய, நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய அதே அரச படையினரே, அவர்களால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் மத்தியில் இன்னமும் ஆக்கிரமித்துள்ளனர் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இந்த தீர்மானம், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறு ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைத்த பரிந்துரையை முற்றிலும் புறக்கணித்துள்ளது. இதே பரிந்துரையை அனைத்து முன்னாள் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர்களும், இலங்கைக்கு வருகை தந்து அறிக்கையிட்ட ஒன்பது முன்னாள் ஐ. நா சிறப்பு அறிக்கையாளர்களும் மற்றும் இலங்கை தொடர்பான ஐ.நா நிபுணர்கள் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் இதே பரிந்துரையை வலியுறுத்தி உள்ளனர்.

இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை, நாம் உட்பட பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், அரசியல் கட்சிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகம் உட்பட அனைத்து தமிழ் மக்கள் தரப்பினாலும் வலியுறுத்தப்பட்டது. இலங்கையின் அரச படையினராலும் அரசியல் தலைவர்களாலும் தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட வன்கொடுமைகளுக்கு நீதியை பெற்றுக்கொள்ளும் ஒரே வழியாக இதனையே எதிர்பார்த்திருந்தோம். ஆனால் இந்தத் தீர்மானம் எங்களின் அனைத்துக் கோரிக்கைகளையும் முற்றிலும் புறக்கணித்துள்ளது.

இலங்கை தொடர்பான ஐ. நா.வின் உள்ளக ஆய்வு அறிக்கையின்படி, போரின் இறுதி ஆறு மாதங்களில் சுமார் 70 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டம் பெப்ரவரி 2017 இல், தமிழ்ப் பெண்கள் “பாலியல் அடிமைகளாக” கையாளப்பட்ட இலங்கை இராணுவ “வன்புணர்வு முகாம்கள்” பற்றிய விவரங்களை ஐ. நாவிடம் ஒப்படைத்தது. மேலும், அரச படையினரால் கைக்குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

ஐ.நா.வின் மூத்த அதிகாரிகள் மற்றும் பெரும் இழப்பை சந்தித்த தமிழ் சமூகத்தின் பல்வேறு தரப்பினாலும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதிலும், சமர்ப்பிக்கப்பட்ட இத்தீர்மானம் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த தவறியது மட்டுமல்லாது, பாதிக்கப்பட்ட தமிழ் இனத்தின் பெரும் துயரத்தையும் வலிகளையும் புறக்கணித்துள்ளது. ஆகவே இந்த நியாயமற்ற தீர்மானத்தை நாங்கள் முற்றாக நிராகரிக்கின்றோம் - என்றுள்ளது.

(ஐ)

## இறுவட்டு வெளியீடு!

வடமராட்சி, ஒக். 06

நெல்லை லதாங்கி (திருமதி ஆனந்தராணி நாகேந்திரனின்) அகவை 60இல் சிறுவர் கவி நயப்பாடல்கள் கர்நாடக சங்கீத செயன்முறை பாடல்களைக்கொண்ட இறுவட்டு வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அதிபர் ஆ. சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், கௌரவ விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் இ. தயாரூபன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய கல்வி பணிப்பாளர் ச. சத்தியபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ - 02)

## பொதுக் கூட்டமும் காலபோக கூட்டமும்!

யாழ்ப்பாணம், ஒக். 06

இருபாலை தெற்கு விவசாய சம்மேளனத்தின் பொதுக் கூட்டமும் காலபோக கூட்டமும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் மானியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளமையால் 2022 ஆம் ஆண்டுக்கான சந்தா பணத்தைச் செலுத்தி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்வதுடன் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் ந. கஜேந்திரகுமார் கேட்டுள்ளார்.

## நாவல் அறிமுக விழா!

யாழ்ப்பாணம், ஒக். 06

ஈழத்தின் பிரபல பெண் எழுத்தாளரும் ஆசிரியருமான ஸ்ரீலேக்கா பேரின்பகுமாரின் ‘கோவர்த்தனம்’ நாவல் அறிமுக நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் இணுவில் இளந்தொண்டர் சபை அரங்கிலே இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோன்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தநிகழ்வில் நூல் நயப்புரையைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் வ. மகேஸ்வரனும், கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வமனோகரனும் வாழ்க்கைத்திறன் விருத்திப் பயிற்றுவிப்பாளர் வ.றொபின்சனும், ஏற்புரையை நூலாசிரியர் ஸ்ரீலேக்கா பேரின்பகுமாரும் ஆற்றவுள்ளனர்.

ஆர்வலர்களை இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
06.10.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், புரட்டாதி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# தொடரும் நிச்சயமற்ற தன்மை?

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து நிலைமைகளில் ஓரளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டன. எரிபொருளுக்கான நீண்ட வரிசை இல்லாமல் போனது. எரிவாயு கொள்கலன்களுடன் மக்கள் வீதிகளை மறிக்கும் நிலைமை மாறியது. ஒப்பீட்டடிப்படையில் நிலைமைகள் சுமுகமாகின. ஆனாலும் கணிசமான பிரச்னைகள் தீரவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி தொடர்பில் இறுதி முடிவுகள் எட்டப்படவில்லை. சில இணக்கப்பாடுகள் ஏற்பட்டிருந்தாலும்கூட அவை நடைமுறைக்கு வருவதற்கு காத்திருக்க வேண்டியிருக்கின்றது. ஆனாலும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கப்பெற்றாலும்கூட அதன் மூலம் பிரச்னைகள் முற்றிலுமாக தீர்ந்துவிடப் போவதில்லை. ஏனெனில், நாணய நிதியம் இணங்கியிருக்கும் உதவித் தொகை சிறியது. உண்மையில் நாணய நிதியம் அறிவித்திருக்கும் தொகையை விடவும் இந்தியா அதிக தொகையை கடனாக வழங்கியிருக்கின்றது.

பொருளாதார நிலைமைகள் தொடர்ந்தும் அச்சுறுத்தும் நிலையிலிருக்கின்றபோது மறுபுறம் அரசியல் நிலைமை தொடர்ந்தும் ஒரு நெருக்கடிக்குள்தான் இருக்கின்றது. ரணில் ஜனாதிபதியாக இருந்தபோதிலும் பாராளுமன்றத்தின் அதிகாரம் இப்போதும் ராஜபக்ஷக்களின் வசமாகவே இருக்கின்றது. எதிர்க்கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு போதிய ஆதரவை வழங்காத நிலையில் ரணில் விரும்புவது போன்று பல்வேறு விடயங்களை செய்ய முடியவில்லை. இவ்வாறானதொரு நிலைமை தொடரும்போதுதான், மறுபுறமாக எதிரணிகள் அரசாங்கத்தைக் கைப்பற்றும் முயற்சியிலும் தீவிரம் காண்பித்து வருகின்றன. ஒருபுறம் மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தை வீழ்த்தப் போவதாகக் கூறிவருகின்றார். இன்னொருபுறம், ஜீ. எல். பீரிஸ் தலைமையிலான டலஸ் அழகப்பெரும அணியினர் அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமென்று கூறுகின்றனர். இவை ஒருபுறம் என்றால் மறுபுறமோ பாராளுமன்றத்தை தங்கள் வசப்படுத்தியிருக்கும் ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுனவோ ரணில் விக்கிரமசிங்கவின் நகர்வுகளுக்கு முற்றிலுமாக ஒத்துழைப்பு வழங்க மறுத்து வருகின்றது.

இந்த நிலைமையானது - நாடு தொடர்ந்தும் ஒரு வகையான அரசியல் நெருக்கடிக்குள் இருப்பதான தோற்றத்தையே காட்சிப்படுத்துகின்றது. ரணில் இதனை எவ்வாறு சமாளிக்கப் போகின்றார்? அவரால் முடியுமா? இதற்கிடையில் 22ஆவது திருத்தச்சட்ட விவகாரத்திலும் மாறுபட்ட அபிப்பிராயங்கள் முன்வைக்கப்படுகின்றன. இப்போதிருப்பது போன்றதொரு நிலைமை தொடருமாயின், ரணில் எதிர்பார்ப்பது போன்று நிலைமைகளை சமாளிக்க முடியாது. இதனை எதிர்கொள்வதற்கு இருக்கின்ற ஒரேயொரு வழி தேர்தலுக்கு செல்வதுதான். ஆனால், ராஜபக்ஷக்கள் தேர்தலை எதிர்கொள்ளத் தயங்குவதாகவே தெரிகின்றது. தற்போதுள்ள சூழலில் தேர்தல் இடம்பெற்றால் ராஜபக்ஷக்களால் வெற்றியை பெற முடியாது. அதேவேளை அவர்களின் தோல்வியும் கௌரவமான தோல்வியாக இருக்கப்போவதில்லை.

ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் தோல்வியடைவதற்கு எதுவுமில்லை. வெற்றியடைவதற்கு வாய்ப்பு கிடைத்தால் அதனை அவர் உச்சளவில் பயன்படுத்திக் கொள்வார். ரணிலின் எதிர்பார்ப்பு இவ்வளவே. ஆனால், ரணிலை தோற்கடிக்கும் அல்லது ரணிலுக்கு நெருக்கடியை கொடுக்கும் முயற்சிகள் நாட்டுக்கு நன்மையை கொண்டுவருமென்றால் - அது பிரச்னைக்குரிய விடயமல்ல. ஆனால், அரசாங்கத்தை வீழ்த்தப் போவதாகக் கூறும் எவரிடமும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான தெளிவான திட்டங்கள் இல்லை. அதேவேளை மாற்றங்களுக்கு முட்டுக்கட்டை போடும் பொதுஜன பெரமுனவிடமும் சிறந்த வேலைத் திட்டங்கள் இல்லை. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் - எவர் அதிகாரத்திலிருந்தாலும் இன்றைய நிலையில் நாட்டின் எதிர்காலமோ கையேந்தும் நிலையில்தான் இருக்கப் போகின்றது.

எனவே, தற்போதுள்ள அரசியல் கட்டமைப்பின் மூலம் அதிக தூரம் பயணம் செய்ய முடியாத நிலைமையே காணப்படுகின்றது. மாற்றங்களுக்கு முட்டுக்கட்டையிடும் அரசியல் சூழல் தொடருமெனின் ரணிலாலும் எதனையும் முன்கொண்டு செல்ல முடியாமல் போகலாம். பொருளாதார நெருக்கடி மீளவும் பழைய அரசியல் பதற்ற நிலைமையை தோற்றுவிக்கலாம்.

# வேண்டுமா ஆசிரியர் தினம்?

## *சக ஆசிரியர்களுக்கு ஒரு மடல்!*

**இன்று ஆசிரியர் தினம். அதையொட்டி இந்தக் கடிதம் பிரசுரமாகிறது.**

*மதிப்புக்குரிய சக ஆசிரிய நண்பர்களே,
அன்புடன் எழுதிக்கொள்ளும் ஒரு மடல்,*

*இம் மடலை நீங்கள் வாசிக்கும்போது இன்றைய நிகழ்வில் உங்கள் பாடசாலைகளில் மாணவச் செல்வங்களின் பரிசில்களைப் பெற்றும், கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றியும், விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றியும் மிகவும் களைப்புடன் இருப்பீர்கள். இருப்பினும் தயவு செய்து இம்மடலை இறுதிவரை வாசியுங்கள்.*

*ஆசிரியர்களின் கல்வி அறிவை மேம்படுத்துவதும், எதிர்கால சந்ததியின் கல்வி உங்கள் கையில்தான் உள்ளதை என்பதை உணர வைப்பதற்கும், அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பாராட்டுவதை ஓர் ஆயுதமாக பயன்படுத்த வேண்டும் என்ற பிரதான நோக்குடன் இத் தினம் 1994 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 5 இல் உருவாக்கப்பட்டது.*

*இதன் மூலம் எமக்கு ஒரு மறைமுக செய்தி வழங்கப்பட்டுள்ளதை நாம் அனைவரும் கவனிக்கத் தவறிவிட்டோமோ என்ற ஐயம் என் மனதில் நீண்ட காலமாகவே வேரூன்றியுள்ளது. இதனை இன்று உங்களுடன் பகிர இந்த மடலை ஓர் சந்தர்ப்பமாகப் பயன்படுத்த முனைகிறேன்.*

*கற்றல் கற்பித்தல் செயல்பாடு ஆரம்பிக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் ஏன் 1994ஆம் ஆண்டுதான் இத்தினம் முதல் முதலில் ஆரம்பிக்கப்பட்டது? தேவை வரும் போதே ஒரு புதிய விடயம் ஆரம்பிக்கப்படும். எதிர்கால சந்ததியின் கல்வி எங்கள் கையில் தான் உள்ளது என்ற சிந்தனை தொண்ணூறுகளில் (1990) ஆசிரியர்களின் மனதில் வீழ்ச்சியடைய தொடங்கியதன் காரணமாகவே இந்தத் தினத்தை ஆரம்பிக் வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டிருந்தது. ஆகவே, இத்தினத்தை எமது ஆசிரியத்துவத்தின்மீது வைக்கப்பட்ட பாரிய குற்றச்சாட்டுத் தினமாகவே நான் கருதுகின்றேன்.*

*எனவே இத்தினத்தை மாணவர்கள் நினைவுகூருகிறார்ளோ இல்லையோ ஆசிரியர்களான நாம் கண்டிப்பாக நினைவுகூர வேண்டும் என்பதுடன் எமது கடமையை உணர்ந்து அதைத் திறம்பட ஆற்ற இத்தினத்தில் நாம் அனைவரும் உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும்.*

*மாணவச் செல்வங்களின் பாராட்டைப் பெறும் தகுதிக்கு நாம் வந்துவிட்டோமா? நாம் எமது மனச்சாட்ச்சியைத் தொட்டு கேட்க வேண்டும் இக் குழந்தைகள் எம்மைப் பாராட்டித் தரும் அன்புப் பரிசில்களை பெற்றுக் கொள்ளும் தகுதி எம்மிடம் உள்ளதா? நாம் ஒரு சிறந்த ஆசிரியராக இருந்துள்ளோமா?*

*அவ்வாறாயின் ஓர் ஆசிரியருக்கும் சிறந்த ஆசிரியருக்கும் இடையிலான வேறுபாடுகளை நாம் நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும். பைபிளில் சொல்லப்பட்டுள்ள பத்துக் கட்டளைகள் போன்று இங்கு நான் 12 விடயங்களை உங்கள் முன் சமர்ப்பணம் செய்கின்றேன். இதை ஏற்பதும் நிராகரிப்பதும் உங்கள் சுதந்திர தீர்மானத்தைப் பொறுத்தமையும்.*

*(1) ஆசிரியர் தினத்தில் மாணவர்களிடம் பொருளாதார நன்மையை எதிர்பார்ப்பவன் ஆசிரியன். இதற்கு மாறாக இத் தினத்தில் மாணவர்களிடம் அன்பையும், பண்பையும், சிறந்த அறிவையும் எதிர்பார்ப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(2) கற்பிப்பதற்கு வகுப்பறை வேண்டுமென்பவன் ஆசிரியன். மாறாக தான் கற்பிக்கும் இடமெல்லாம் வகுப்பறை என்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(3) கெட்டிக்கார மாணவனைத் தாருங்கள் கற்பிக்கிறேன் என்பவன் ஆசிரியன். எந்த மாணவனையாவது தாருங்கள் கற்பிக்கிறேன் என்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(4) வேறு தொழில் கிடைக்காமையால் ஆசிரியத்திற்கு வந்தவன் ஆசிரியன். ஆனால், வேறு வேலை கிடைத்தும் ஆசிரியத்திற்கு வந்தவன் சிறந்த ஆசிரியன்.*

*(5) சம்பளம் பெறுவதற்காகக் கற்பிப்பவன் ஆசிரியன். ஆனால் கற்பிப்பதற்காகச் சம்பளம் பெறுபவன் சிறந்த ஆசிரியன்.*

*(6) முன்வரிசை மாணவர்களை மட்டும் நேசிப்ப வன் ஆசிரியன். பின்வரிசை மாணவர்களையும் நேசிப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(7) எப்படா பாடம் முடியுமென மாணவர்களை ஏங்க வைப்பவன் ஆசிரியன். ஐயோ பாடம் முடியப்போகிறதே என மாணவர்களை ஏங்க வைப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(8) ஏட்டுப்படிப்பை மட்டும் கற்பிப்பவன் ஆசிரியன். ஏட்டுப்படிப்புடன் வாழ்கைக் கல்வியையும் கற்பிப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(9) தன்நலம் கருதிக் கற்பிப்பவன் ஆசிரியன். தன்நலம் கருதாது கற்பிப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(10) மாணவர்களைத் தண்டிப்பவன் ஆசிரியன். மாணவர்களைக் கண்டிப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(11)மாணவர் பிரச்சினைகளை தன் பக்கத்தில் மட்டும் நின்று பார்ப்பவன் ஆசிரியன். அதை மாணவர் பக்கமும் நின்று பார்ப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*(12) மாணவர்களை மாற்றான் பிள்ளையாக நினைப்பவன் ஆசிரியன். மாணவர்களை தன் பிள்ளையான நினைப்பவன் சிறந்த ஆசிரியன்.*

*ஆகவே, இக் குழந்தைகளை அதட்டி பொருளாதார பரிசில்களை நாம் கைநீட்டிப் பெறுவதைத் தவிர்த்தும் குழந்தைகளின் பணத்தில் களியாட்ட விழா நடத்தாது தவிர்த்தும் சிறந்த ஆசிரியர்கள்தான் நாம் என்பதை நெஞ்சை நிமிர்த்தி அவர்களுக்கு இடித்துரைப்போம்.*

*ஆகையால் இனி தொடரப்போகும் காலங்களில் மேலும் திறம்பட எமது சேவையை ஆற்றுவோம் என்பதை ஒவ்வோர் ஆசிரியரும் இன்றைய தினத்தில் உறுதிபூண்டு கொள்வோம்.*

*ஆகவே கொஞ்சம் சிந்தியுங்கள் எனது சக ஆசிரிய நண்பர்களே.*

*நன்றி.
இப்படிக்கு
டி. சாம்.*

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 06 வியாழக்கிழமை
சுபகிருது வருடம் - புரட்டாதி 19
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : ஏகாதசி




**மேடம்**

எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும். உங்களின் ஒரு முயற்சி வெற்றியாகும். நீங்கள் மேற்கொள்ளும் செயல் நண்பர்களின் உதவியுடன் நிறைவேறும். புதிய முயற்சி பலன் தரும்.

**இடபம்**

பண வரவு அதிகரிக்கும் பழைய கடன்களை அடைப்பீர்கள். புதிய வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றியாகும். எதிர்பாராத வருமானம் வந்து சேரும்.

**மிதுனம்**

முயற்சிகளில் கவனம் தேவை. யோசித்து செயல்பட வேண்டிய நாள். அலைச்சல் அதிகரிக்கும். மனதில் தேவையற்ற சிந்தனைகள் உண்டாகும். கூட்டுத் தொழிலில் குழப்பத்தை சந்திப்பீர்கள்.

**கடகம்**

எதிர்வரும் பிரச்னைகளை முறியடித்து நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். பொருளாதார நெருக்கடி விலகும். பெரியோரின் ஆலோசனைக் கேட்டு செயல்படுவதால் முயற்சியில் நன்மை உண்டாகும்.

**சிம்மம்**

வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த பண வரவு உண்டு. பகைவர்கள் தொல்லை நீங்கும். வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.

**கன்னி**

நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்தவை அனுகூலமாகும். தொழிலில் இருந்த தடைகள் விலகி வளர்ச்சி கூடும். பணியாளர் ஒத்துழைப்பார்கள்.

**துலாம்**

நிதானமுடன் செயல்பட வேண்டிய நாள். சில செயல்கள் இன்று இழுபறியாகும். அரசு வழியிலான முயற்சிகள் தள்ளிப்போகும். கோபத்திற்கு இடமளிக்க வேண்டாம். பணியிடத்தில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**விருட்சிகம்**

நீங்கள் எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். ப கொடுத்த வாக்கை நிறைவேற்று வீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் நலனுக்காக மேற்கொள்ளும் முயற்சி ஒன்று நிறைவேறும்.

**தனுசு**

வீட்டை மாற்றம் செய்ய முயற்சிப்பீர்கள். அதற்குரிய செயலில் ஈடுபடுவீர்கள். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் அகலும். உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும். தம்பதி இடையே பிரச்னைகள் விலகும்.

**மகரம்**

உறவினர்கள் உங்கள் வீடு தேடி வருவர். உங்கள் அணுகுமுறையால் நன்மைகளை அடைவீர்கள். புதிய முயற்சி நிறை வேறும். நீண்ட நாட்களாக வராமல் இருந்த பணம் இன்று வந்து சேரும்.

**கும்பம்**

நிதானமாகப் பேசி நன்மைகள் அடைய வேண்டிய நாள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி கள் நடைபெறக் கூடிய அறிகுறிகள் தோன்றும். செலவுகள் கூடும். தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் தள்ளிப்போகும்.

**மீனம்**

எதிர்பார்த்த வரவு இன்று வந்து சேரும். உங்கள் முயற்சிகள் எளிதாக நிறைவேறும். அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். பொன் பொருள் சேர்க்கை உண்டு.

# “தி. மு. கவும் திராவிட மொடலும் ஆன்மீகத்துக்கு எதிரானவையல்ல!”

*சென்னை, ஒக். 06*

*“ஆன்மிகத்துக்கு எதிரானது அல்ல திமுக. ஆன்மிகத்தை அரசியலுக்கும் தங்கள் சொந்த சுயநலத்துக்கும் உயர்வுஇ தாழ்வு கற்பிப்பதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு எதிரானது இந்த திராவிட மொடல் தி. மு. க. ஆட்சி” என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.*

*சென்னையில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற வள்ளலார் முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். அந்த விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியது -*

*“தந்தை பெரியாரின் பிறந்தநாளை சமூக நீதி நாளாகவும்இ அண்ணல் அம்பேத்கரின் பிறந்தநாளை சமத்துவ நாளாகவும் அறிவித்த நமது திராவிட மொடல் அரசு, திருவருட் பிரகாச வள்ளலாரின் பிறந்தநாளை தனிப் பெரும் கருணை நாளாக அறிவித்திருக்கிறது.*

*வள்ளலார் பிறந்து 200 ஆண்டுகள். அவர் தொடங்கிய தருமசாலைக்கு 156 ஆண்டுகள்இ அவர் ஏற்றிய தீபத்துக்கு 152 ஆண்டுகள்இ ஆகியவற்றை இணைத்து முப்பெரும் விழாவாக இந்நிகழ்வு நடைபெறுகிறது. இந்த நிகழ்ச்சி நடைபெறுவதைப் பார்த்து சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஏன் அதிர்ச்சியாகக் கூட இருக்கலாம்.*

*என்னைப் பொறுத்தவரை சிலர் சொல்லி வரக்கூடிய அவதூறுக்கு பதில் சொல்லக்கூடிய விழாதான் இந்த விழா. திராவிட மொடல் ஆட்சி என்பது ஆன்மிகத்துக்கு எதிரானது. திராவிட மொடல் ஆட்சியானது நம்பிக்கைகளுக்கு எதிரானது. இவ்வாறு மதத்தை வைத்து பிழைக்கக்கூடிய சிலர் நாட்டிலே பேசி வருகிறார்கள்.*

*மீண்டும் இதை குறிப்பிட்டு சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால், முன்னால் சொன்னதை மட்டும் எடுத்துக்கொண்டு, பின்னால் சொன்னதை வெட்டிவிட்டு சில சமூக ஊடகங்கள் வெளியிடும். அதனால், முன்கூட்டியே அதை உங்களுக்குச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.*

*திராவிட மொடல் ஆட்சியென்பது ஆன்மிகத்துக்கு எதிரானது. திராவிட மாடல் ஆட்சியானது நம்பிக்கைகளுக்கு எதிரானது. இதைமட்டும் பதிவிட்டு முதல்வர் ஸ்டாலின், இப்படி பேசினார் என்று வெட்டிஇ ஒட்டி பின்னாடி பேசியதை வெட்டிவிடுவர். மதத்தை வைத்து பிழைக்கக்கூடிய சிலர் நாட்டிலே பேசி வருகிறார்கள் என்பதை வெட்டிவிட்டு பதிவு செய்துவிடுவர். அதற்கென்று சில சமூக ஊடகங்கள் உள்ளன.*

*நான் தெளிவோடு சொல்ல விரும்புவதுஇ ஆன்மிகத்துக்கு எதிரானது அல்ல தி. மு. க. ஆன்மிகத்தை அரசியலுக்கும், தங்களது சொந்த சுயநலத்துக்கும் உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கு மட்டுமே பயன்படுத்திக் கொள்பவர்களுக்கு எதிரானது இந்த திராவிட மாடல் திமுக ஆட்சி. தமிழ் மண்ணின் சமய பண்பாட்டை அறிந்தவர்கள் இதை நன்கு உணர்வார்கள். பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென்று, பிற்போக்குத்தனங்களை எதிர்க்கக் கூடிய வள்ளுவரின் மண்தான் இந்த தமிழ்மண்” என்று அவர் பேசினார்.*

# இந்து என்பது மதமல்ல; அது வாழ்க்கை முறை!

## திருமாவளவனுக்கு பா. ஜ. க. பதில்

*சென்னை, ஒக். 06*

*“இந்து என்பது ஒரு மதமல்ல, வாழ்க்கை முறை. இந்தியா என்ற இந்துஸ்தானத்தில் இருப்போர் அனைவரும் இந்துக்கள்தான் என்றே நாம் சொல்கிறோம்“ என்று விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் தலைவர் திருமாவளவனுக்கு ருவிற்றரில் பா. ஜ. க. மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி பதிலளித்துள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் தனது ருவிற்றர் பக்கத்தில்இ “ராஜராஜ சோழன் காலத்தில் சைவம் வேறு வைணவம் வேறு. திருநீறு பட்டை வேறு திருமண் நாமம் வேறு. இரண்டும் வெளிப்படையாக மோதிக்கொண்டன. குருதிச் சேற்றில் தலைகள் உருண்டன. மாறி மாறி மதமாற்றம் செய்து கொண்டன. அக்காலத்தில் ஏது இந்து? இக்காலத்து லிங்காயத்துக்களே தாங்கள் இந்துக்கள் இல்லை என்று உரத்துச் சொல்கின்றனர். போராடவும் செயகின்றனர். இந்நிலையில், 1000 வருடங்களுக்கு முன்னர் லிங்கத்துக்குப் பெருங்கோயில் கட்டியதால் அவர்மீது இன்றைய அடையாளத்தைத் திணிப்பது சரியா? இது வரலாற்றுத் திரிபாகாதா? இதைத்தானே குறிப்பிட்டார் இயக்குநர் வெற்றிமாறன் என்கிறார் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன்.*

*இதைத்தானே நாமும் சொல்லி வருகிறோம். இந்து என்பது ஒரு மதமல்லஇ வாழ்க்கை முறை என்று. இந்தியா என்ற இந்துஸ்தானத்தில் இருப்போர் அனைவரும் இந்துக்கள்தான் என்றே நாம் சொல்கிறோம். நீங்கள் சொல்வது போல் சைவமும்இ வைணவமும் மோதிக் கொண்டதாகவே இருக்கட்டும். அந்த மோதலை தடுத்துஇ இணைத்தது இந்து என்ற சொல்தானே? தவறா? ஏன் மோத வேண்டுமா? குருதிச்சேற்றில் தலைகள் உருண்டதாகவே வைத்து கொள்வோம். அதை தடுத்து, சைவத்தையும், வைணவத்தையும் ஒன்றிணைத்தது “இந்து“ என்ற சொல்தானே? ஏன் அடித்து கொண்டு சாக வேண்டும் என்பதுதான் உங்கள் விருப்பமா?*

*மாறிமாறி மதமாற்றம் செய்தது தவறு என்கிறீர்களா? அப்படியானால் தற்போது நடைபெறும் மதமாற்றங்களுக்கு ஆதரவளிப்பது ஏன்? கிறிஸ்துவர்களின் மதமாற்றங்களை கண்டிக்கிறேன் என்று சொல்ல துணிவிருக்கிறதா? ஆங்கிலேயன் எழுதிய மனுதர்ம நூல் என்ற பொய்யான “மனுஸ்ம்ரிதியை“ படித்து இன்றைய இந்துக்களிடம் அன்றைய அடையாளத்தை திணிப்பது ஏன்? இது வரலாற்று மோசடியில்லையா? ஆக, மதமாற்றங்கள் நடைபெற வேண்டும். அதனால் மக்கள் வெளிப்படையாக மோதிக்கொண்டு அடித்து கொள்ள வேண்டும். குருதிச்சேற்றில் தலைகள் உருள வேண்டும்.*

*அதனால்தான் பல மதங்களை ஒன்றிணைத்திருக்கிற இந்து என்று சொல்லப்படுகிற மதத்தை எதிர்க்கிறீர்கள்? அப்படித்தானே திருமாவளவன் அவர்களே? மீண்டும் சொல்கிறேன். இந்து என்பது ஒரு மதமல்ல. வாழ்க்கை முறை. மண்ணையும் கல்லையும் புல்லையும் மரத்தையும் கண்ணுக்கு தெரியாததையும் மனதுக்கு பிடித்ததையும் வழிபடும் நம்பிக்கையின் அடிப்படையே அழிவில்லாத, நிலையான “சனாதனதர்மம்” என்ற இன்றைய அமைதியான - உண்மையான தர்மத்தை - நெறியை போதிக்கின்ற இந்து தர்மம் என்கிற கலாசாரம். தேவையில்லாததை படித்து குழம்பி போயுள்ளீர்கள் திருமாவளவன் அவர்களே, தெளிவு பெறுங்கள். வெறுப்பு அரசியலை கை விடுங்கள்” என்று பதிவிட்டுள்ளார்.* (ஐ)

# ஜெனிவாப் பிரேரணை அரசுக்கு சவாலாகாது!

## அடித்து சொல்கிறார் விஜயதாஸ

கொழும்பு, ஒக். 06

**ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 51ஆவது கூட்டத் தொடரில் இலங்கை மீதான புதிய பிரேரணை நிறைவேற்றப்பட்டால் அது அரசுக்குச் சவாலாக அமையாது என்று நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்தார்.**

"இலங்கை அரசின் பிரதிநிதிகள் என்ற ரீதியில் ஜெனிவா சென்றிருந்த நாம், நாட்டில் மீண்டுமொரு இருண்ட யுகம் ஏற்பட இடமளிக்கமாட்டோம் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளோம். எமது நிலைப்பாட்டை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்" என்றும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

'ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்த பிரேரணை நாளை வாக்கெடுப்புக்கு விடப்பட்டால் வாக்களிக்கத் தகுதியுள்ள 47 நாடுகளில் ஆக ஆறு நாடுகள் மாத்திரமே தமக்கு ஆதரவாக - பிரேரணைக்கு எதிராக வாக்களிக்கும் என்று இலங்கை அரசு அச்சம் கொண்டுள்ளது' எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் அமைச்சர் விஜயதாஸவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜெனிவாக் கூட்டத் தொடரின் 51ஆவது அமர்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உரையாற்றும்போது இலங்கையின் தற்போதைய நிலைமையையும், அரசின் நிலைப்பாட்டையும் விலாவாரியாக எடுத்துரைத்துள்ளார்.

எனவே, இதைப் புரிந்து கொள்ளும் மனநிலை ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும் அதில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும் இருக்கும் என்றே நாம் நம்புகின்றோம்.

இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்தி ஜெனிவாவில் எத்தனை தீர்மானங்களும் நிறைவேற்றப்படலாம். அதை அரசால் தடுக்க முடியாது. ஆனால், உள்ளகப் பொறிமுறை யூடாகவே அரசு கருமங்களை முன்னெடுக்கும். சர்வதேசப் பொறிமுறைக்கு இலங்கையில் ஒருபோதும் இடமேயில்லை- என்றார். (அ)

# கஞ்சா செய்கைக்கு பந்துலவும் ஆதரவு!

கொழும்பு, ஒக். 06

"ஏற்றுமதி மற்றும் மருத்துவ தேவைகளுக்காக கஞ்சா செய்கைக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்." - என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது கஞ்சா வளர்ப்புக்கு அனுமதி வழங்குவது குறித்து அமைச்சரவையில் ஏதேனும் கலந்துரையாடப்பட்டதா எனவும், கஞ்சா வளர்ப்பு குறித்து தங்களின் தனிப்பட்ட கருத்து என்னவெனவும் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"பொருளாதார மேம்பாட்டுக்காக ஏற்றுமதி மற்றும் மருத்துவ தேவைக்காகவும், விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் கஞ்சா வளர்க்க அனுமதி வழங்க வேண்டும் என அன்று முதல் சுட்டிக்காட்டி வருகின்றேன். இதனால் கடும் விமர்சனத்துக்கும் உள்ளானேன்.

அந்திய செலாவணி நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், போதைக்காக அல்லாமல், ஏற்றுமதிக்காக அனுமதி வழங்குவது ஏற்புடைய நடவடிக்கை. இது தொடர்பில் கருத்தாடல்கள் இடம்பெற வேண்டும். ஏற்றுமதிக்காக கஞ்சா வளர்ப்பது குறித்து துறைசார் அமைச்சர், சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரியுள்ளார்" - என்றார். (அ)

# மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த இருவர் சிக்கினர்!

கொழும்பு, ஒக்.06

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஹிக்கடுவை பிரதான பாடசாலை மைதானத்தில் வைத்து போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டதாக விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் 29 வயதுடைய பெண் எனவும், அவரிடம் 8 கிராம் 229 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ரத்கம முகாமின் விசேட அதிரடிப்படையினர் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பெண் ஒருவருடன் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக ஹிக்கடுவை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து குறித்த பெண் நீண்டு காலமாக ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது. (அ)

# போதைப்பொருள் கடத்தல்காரன் ஹரக் கட்டா டுபாயில் விடுதலை!

கொழும்பு, ஒக். 06

டுபாய் பொலிஸாரின் பிடியில் இருந்த பிரபல போதைப் பொருள் மன்னன் நடுன் சிந்தக விக்கிரமரத்ன என்ற ஹரக் கட்டா கடந்த திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டதாக டுபாயிலிருந்து தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் தொடர்பான குற்றப் பதிவுகளை இலங்கை அதிகாரிகள் உரிய நேரத்தில் டுபாய் அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கத் தவறியதால் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான கோப்புகள் கடந்த திங்கட்கிழமை வரை கூட பாதுகாப்பு அமைச்சிடம் இருப்பதாக பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடனான சந்திப்பில் தெரியவந்துள்ளது.

செப்ரெம்பர் 18 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் துறை மூலம் தேவையான நடவடிக்கைக்காக இந்த கோப்பு அமைச்சுக்கு அனுப்பப்பட்டது.

இதன்படி, சந்தேகநபருக்கு எதிராக தேவையான நடவடிக்கைகளுக்காக டுபாய் அதிகாரிகளுக்கு உரிய கோப்புகளை அனுப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்திருந்தார். இந்தக் கோப்பு இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக டுபாய் பொலிஸாருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கடந்த ஒகஸ்ட் 11ஆம் திகதி டுபாயில் இருந்து மலேசியாவுக்குச் செல்ல முயன்ற போது அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட சர்வதேச சிவப்பு பிடியாணையின் பேரில் டுபாய் பொலிஸாரால் ஹரக் கட்டா கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்படும்போது, சந்தேக நபர் போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வந்துள்ளார்.

ஹரக் கட்டா நாட்டில் பாரிய அளவிலான ஹெரோயின் கடத்தல் மற்றும் அவரது வழிகாட்டுதலின் பேரில் பல கொலைகள் செய்ததற்காக தேடப்படும் சந்தேக நபர் ஆவார். கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் ஹரக் கட்டாவால் கடத்தப்பட்டதாக கூறப்படும் பெருமளவிலான ஹெரோயின் பல சந்தர்ப்பங்களில் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பேராதனை பல்கலைக்கழக கலைப்பீடாதிபதிக்கு மிரட்டல்!

கொழும்பு, ஒக். 06

சில தொழிற்சங்கங்களைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து தனக்கு கொலை மிரட்டல்கள் மற்றும் மிரட்டல் அழைப்புகள் வந்ததாக பேராதனை பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரபாத் ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அவர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கும் தாம் செயற்பட்டு வருவதாக அவர் கூறினார்.

எவ்வாறாயினும், ராகிங் சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாணவர் சங்கங்கள் தம்மை அச்சுறுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தின் சட்டப் பிரிவுக்குள் மாணவர்களை அச்சுறுத்தவோ தாக்கவோமாட்டோம் என்று மாணவர் சங்கங்கள் எழுத்து பூர்வமாக உறுதியளிக்கும் வரையில் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவதில்லை என பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த கலைப் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் பிரபாத் ஏகநாயக்க, பாதுகாப்புக் காரணங்களுக்காக பீடம் மூடப்பட்டுள்ளதாகவும், மாணவர்கள் தொடர்ந்து வகுப்புகளைப் பின்பற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

பகிடிவதையை எதிர்க்கும் மாணவர்கள் தாக்கப்படமாட்டார்கள் என்றும், அவர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் சகல பல்கலைக்கழக வசதிகளையும் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என்றும் மாணவர் அமைப்புகளிடமிருந்து நிர்வாகம் உறுதியளிக்கவேண்டும் என்று பேராசிரியர் ஏகநாயக்க கூறினார்.

நிர்வாகம் இதுவரை உறுதிமொழியைப் பெறவில்லை என்றும், எனவே அவர்கள் நேரில் கல்விப் பாடங்களை மீண்டும் தொடங்க மாட்டார்கள் என்றும் பேராசிரியர் பிரபாத் குறிப்பிட்டார்.

நிலைமை மாணவர்களுக்கு பயனுள்ளதாக இல்லை என்பதை ஒப்புக்கொண்ட அவர், இருப்பினும் எந்தவொரு தனிநபரின் பாதுகாப்பையும் சமரசம் செய்ய முடியாது என்பதை வலியுறுத்தினார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அண்மைய நாட்களில் மாணவன் ஒருவரின் மரணம் மற்றும் காணாமல்போன சம்பவங்கள் உட்பட பல சம்பவங்கள் பதிவாகியிருந்த நிலையில் தற்போது நிலைமை கட்டுப்பாட்டை மீறும் என நிர்வாகம் கவலையடைந்துள்ளது. (அ)

# வடக்கு ரயில் சேவை சீர் செய்யப்பட்டது!

கொழும்பு, ஒக். 06

ரயில் ஒன்று தடம்புரண்டமையால், வடக்கு மார்க்கத்தில் ரயில் பாதையில் ஏற்பட்டிருந்த பாதிப்பு சீராக்கப்பட்டுள்ளது.

சரக்குகளை ஏற்றிச்செல்லும் ரயில், வெல்லவ பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு தடம் புரண்டது.

இதன் காரணமாக, காங்கேசன்துறை முதல் கொழும்பு - கோட்டை நோக்கி பயணித்த ரயில் சேவை, மஹவ ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், கொழும்பு - கோட்டையிலிருந்து வடக்கு நோக்கி பயணிக்கத்த ரயில் சேவை குருநாகல் வரையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், வடக்கு ரயில் சேவை நேற்று வழமைக்கு கொண்டுவரப்பட்டதாக ரயில் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்தது. (அ)

# வசந்த முதலிகேயின் உயிருக்கு ஆபத்து!

## சபையில் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 06

வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர், ஹஷாந்த குணதிலக்க ஆகியோர் பயங் கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதா கவும், அவர்கள் மீது அர சாங்கத்திற்கு எதிரான செயற் பாடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளதா கவும், அவர்கள் எவ்வாறான அரசாங்க விரோத செயலில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அரசாங்கம் கூறவேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாச நாடா ளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போது வசந்த முதலி கேயின் உயிருக்கு ஆபத்து இருப்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், சிறைச்சாலையில் இருந்து இரவு நேரங்களில் அவர் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படு வதாகவும் செய்திகள் வெளி யாகியுள்ளன என்றும் கூறி னார்.

நாட்டுக்கு எதிரான மனித உரிமைப் பிரேரணைகளுக்கு அரசாங்கமே உத்வேகம் அளிக் கும். அதற்காகத்தான் மாண வர் போராட்டங்கள் தாக்கப் படுகின்றனவா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தான் தீவிரவாதத்திற்கு எதி ரானவன் என்று கூறிய எதிர்க் கட்சித் தலைவர், பயங்கர வாதம் என்ற பெயரில் அப் பாவி மக்களைச் சிறையில் அடைப்பதையும் எதிர்ப்பதாக கூறினார். (அ)

# இலங்கையை உன்னிப்பாக அவதானிக்கிறது பிரிட்டன்!

## அந்நாட்டு அமைச்சர் தெரிவிப்பு

லண்டன், ஒக். 06

**இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாக தொடர்ந் தும் உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.**

இலங்கையின் முக்கிய இராணுவ அதிகாரிகளுக்கு பிரித்தானியா பொருளாதார தடை விதிக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் இது தொடர்பாக கருத்து தெரி விக்கும்போதே பிரித்தானியா வின் இராஜாங்க அமைச்சர்



ஜீஸ் நோர்மன் இதனைத் கூறினார்.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை கண் காணிப்பில் வைத்திருப்பதற் கான சிறந்த பொறிமுறை பிரித் தானியாவிடம் உள்ளது.

தொடர்ந்தும் இலங்கை தமது பொறுப்புக்கூறலை உறுதி செய்ய வேண்டும் என்ற விட யம் வலியுறுத்தப்படும் என வும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஏற்றுமதி வருமானம் வளர்ச்சி!

கொழும்பு, ஒக்.06

கடந்த ஒகஸ்ட் மாதத்து டன் ஒப்பிடுகையில் இவ்வரு டம் ஒகஸ்ட் மாதத்தில் ஏற் றுமதி வருமானம் 90 வீத வளர்ச்சியை காட்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித் தார்.

பொருளாதாரத்தை வலுப் படுத்தும் நோக்கில் அரசாங் கம் மேற்கொண்ட தீர்மானங்க ளுக்கு பலன் கிடைத்து வருவ தாக அவர் குறிப்பிட்டார்.

சரக்கு இறக்குமதிக்கு விதிக் கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக, இம்மாதத்திற்குள் 25 சதவீத இறக்குமதிச் செல வைக் குறைக்க முடிந்துள்ளதா கவும் அமைச்சர் கூறினார்.

இவ்வருடம் ஒகஸ்ட் 31ஆம் திகதிவரை நாட்டின் மொத்த வருமானம் 1232.4 பில்லியன் ரூபாய் என்றும், வருமானத்தை குறைந்தது 400 பில்லியனாக அதிகரிப்பதற் கான சவாலை நாடு எதிர்நோக் கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ)

# பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மேன்முறையீடு செய்ய அனுமதி

கொழும்பு, ஒக். 06

மே 9 வன்முறைச் சம்பவங் களைத் தொடர்ந்து இடமாற் றம் செய்யப்பட்ட பொலிஸ் பொறுப்பதிகாரிகளின் இட மாற்றங்களுக்கு எதிராக மேன் முறையீடு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மே 9ஆம் திகதி இடம் பெற்ற வன்முறையைத் தொடர்ந்து 23 பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இடமாற் றம் செய்யப்பட்டனர்.

இது குறித்த பொது பாது காப்புச் செயலாளர் எஸ். ஹெட்டியாராச்சி தெரிவித்த தாவது:

வன்முறைகள் இடம்பெறு வதைத் தடுப்பதில் குறித்த பொலிஸ் பொறுப்பதிகாரிகள் கடமை தவறியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதே நேரத்தில், புதிய பொலிஸ் பொறுப்பதிகாரிக ளுக்கான நேர்காணல்கள் முடி வடைந்தன. மேலும் எதிர் வரும் 10 ஆம் திகதிக்குப் பிறகு புதிய பொலிஸ் பொறுப்பதி காரிகள் நியமிக்கப்படுவார் கள்-என்றார். (அ)

# பாண் விலை உயராது

கொழும்பு, ஒக். 06

கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ள போதிலும், பாண் அல்லது பேக்கரி பொருட்களின் விலையை அதிகரிக்க விரும்பவில்லை என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன, பேக்கரி பொருட்களில் பயன்படுத்தப் படும் மூலப்பொருட்களின் விலை 400 வீதம் அதிகரித் துள்ளது.

தற்போது ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 13 ரூபாவினால் அதி கரிக்கப்பட்டுள்ளது.

பேக்கரி உரிமையாளர்க ளிடம் பெறுமதி சேர் வரியை அறவிடுவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும்-என்றார்.

கோதுமை மாவின் விலை எதிர்வரும் வாரத்தில் குறைக் கப்படும் என வர்த்தக அமைச் சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் உரை யாற்றியிருந்தார்.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 250 ரூபாவாக குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் கையிருப்பு இந்த வாரம் முதல் இலங் கைக்கு வரும் என அமைச்சர் பெர்னாண்டோ கூறினார்.

தற்போது கொழும்புத் துறைமுகத்தில் சுமார் 100 கொள்கலன்களில் கோதுமை மா இறக்கி வைக்கப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

டுபாய் மற்றும் துருக்கியில் இருந்து இலங்கைக்கு கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதாகவும், ஏற்று மதியில் தாமதம் காரணமாக கோதுமை மாவின் விலை வேக மாக அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# வழமைக்கு திரும்பியது எரிபொருள் விநியோகம்!

கொழும்பு, ஒக்.06

வழமையான செயற்பாட் டிற்கு அமைய நேற்று புதன் கிழமை முதல் எரிபொருள் முற்பதிவு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலிய விநியோகஸ் தர்கள் சங்கத்தின் செயலாளர் கபில நாஓட்டுன்ன இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

தரகுப் பணம் தொடர்பான சிக்கலுக்கு துறைசார் அமைச் சரினால் நேற்றுமுன்தினம் தீர்வு பெற்றுக் கொடுக்கப் பட்டதாகவும் அவர் குறிப் பிட்டார்.

இதற்கமைய, அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங் களுக்கும் நேற்று முதல் உரிய வாறு எரிபொருள் விநியோ கிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# பாவனைக்கு உதவாத அரிசி பதுக்கல் இரண்டு களஞ்சியசாலைகளுக்கு சீல்!

கொழும்பு, ஒக். 06

பேருவளையில் பாவ னைக்கு உதவாத 590 கிலோ கிராம் சம்பா அரிசியை களஞ் சியப்படுத்தி வைத்திருந்த இரு அரிசி களஞ்சியசாலைகளுக்கு சீல் வைப்பதற்கு பொதுச் சுகா தார பரிசோதகர்கள் நடவ டிக்கை மேற்கொண்டனர்.

பேருவளை பொலிஸ் பிரி வுக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாக, பொது சுகாதாரப் பரிசோதகர்கள் பேருவளை பொலிஸாருடன் இணைந்து பேருவளை மற்றும் தர்கா நகர் ஆகிய பகுதிகளில் முன்னெ டுத்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவ்வாறு குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்துடன் தொடர் புடைய சந்தேக நபர் தர்காந கரை வசிப்பவர் என்பது தெரியவந்துள்ளது.

மேலும், பேருவளை பல் பொருள் அங்காடிக்கு அருகி லுள்ள மாபிள் களஞ்சியசா லையில் 500 கிலோகிராம் அரிசி பதுக்கி வைக்கப்பட்டி ருந்ததாகவும், ஏனைய 90 கிலோகிராம் அரிசியை தர்கா நகர் பகுதியில் பதுக்கி வைத்தி ருந்ததாகவும் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் மற்றும் பொது சுகாதார பரி சோதகர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், சந்தேக நபருக்கு எதிராக சட்ட நடவ டிக்கை மேற்கொள்ளப்படும் என பேருவளை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தேசிய பேரவையிலிருந்து விலகினார் ஜீவன் எம்.பி.

கொழும்பு, ஒக். 06

பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் தேசிய பேரவையிலிருந்து விலகியுள் ளார்.

நேற்று பாராளுமன்ற அமர் வின் ஆரம்பத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனைத் தெரிவித்தார்.

அவரது விலகலினால் ஏற் பட்ட வெற்றிடத்துக்கு பாரா ளுமன்ற உறுப்பினர் ம. ராமேஷ்வரன் நியமிக்கப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர் பாட்டளி சம்பிக்க ரணவக்கவும் தேசிய பேரவை யில் உறுப்பினராக இணைத் துக் கொள்ளப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

பிரதமர் தினேஷ் குணவர்த் தன கடந்த செப்ரெம்பர் 20 ஆம் திகதி தேசிய பேரவையை உருவாக்குவது தொடர்பான பிரேரணையைப் பாராளுமன் றத்தில் முன்வைத்திருந்ததுடன், இந்த பிரேரணை எதிர்ப்பு இன்றி ஏகமனதாக அங்கீகரிக் கப்பட்டிருந்தது. (அ)

# ஜெனிவாவில் கூனிக்குறுகி நிற்க ராஜபக்ஷக்களே முழுக்காரணம்!

## குற்றம் சாட்டுகிறார் வாசுதேவ

கொழும்பு, ஒக். 06

**"ஜெனிவாவில் இலங்கை இன்று கூனிக்குறுகி நிற்க ராஜபக்ஷக்களே முழுக்காரணம்."**

**- இவ்வாறு அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

எனினும், இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை தாம் ஒருபோதும் ஏற்கமாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அரசால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்



ததாவது:- ராஜபக்ஷக்களின் தான்தோன்றித்தனமான சில முடிவுகளால் நாடு இன்று படுகுழியில் விழுந்துள்ளது.

ராஜபக்ஷக்களின் சகாவான ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டை மீட்டெடுக்க முடியாது. மக்கள் ஆணை மூலம் புதிய அரசை நிறுவினால்தான் நாட்டுக்கு விடிவு கிடைக்கும்-என்றார். (அ)



# யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனம் அன்பளிப்பு

## இரண்டு கோடி ரூபாய் பெறுமதி கொண்டது

யாழ்ப்பாணம், ஒக். 06

நொதேர்ன் தனியார் வைத்தியசாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால், யாழ். மாநகர சபைக்கு இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான தீயணைப்பு வாகனம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

தீயணைப்பு வாகனத்தை உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை நொதேர்ன் தனியார் வைத்தியசாலையில் இடம்பெற்றது.

கடந்த 2020ஆம் ஆண்டு யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான தீயணைப்புப் வாகனம் விபத்தில் முற்றாக சேதமடைந்திருந்த நிலையில் யாழ்.வணிகர் கழகத்தின் ஒருங்கிணைப்பில் நொதேர்ன் தனியார் வைத்தியசாலை ஸ்தாபகர் எஸ்.பி.சாமியால் குறித்த வாகனம் யாழ்.மாநகர சபைக்கு கையளிக்கப்பட்டது.

கையளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, குறித்த தீயணைப்பு வாகனம், தீயணைப்புபடை வீரர்களால் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நொதேர்ன் தனியார் வைத்தியசாலை நிர்வாகத்தினர், யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன், பிரதி முதல்வர் து.ஈசன், யாழ்.மாவட்ட செயலர் எஸ். மகேசன், யாழ். மாநகர ஆணை யாளர் த. ஜெயசீலன், யாழ்.மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் யாழ்.வணிகர் கழகப் பிரதிநிதிகள், தீயணைப்பு பிரிவு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# லிட்ரோ எரிவாயுவின் புதிய விலை அறிவிப்பு

கொழும்பு, ஒக். 06

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலையையும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோ லிட்ரோ எரிவாயு கொள்கலன் விலை 271 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 4 ஆயிரத்து 280 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.அத்துடன், 5 கிலோ லிட்ரோ எரிவாயு கொள்கலன் விலை 107 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,720 ரூபாவாகும்.

மேலும், 2.3 கிலோ லிட்ரோ எரிவாயு கொள்கலனின் விலை 48 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் புதிய விலை 800 ரூபாவாக குறைந்துள்ளது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார். (அ)

# நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு சனத் நிஷாந்தவுக்கு அழைப்பாணை

கொழும்பு, ஒக். 06

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை எதிர்வரும் ஒக்ரோபர் 13ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்தல் அனுப்பியுள்ளது.

அதில், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் தமக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு எதிராக காரணம் காட்டுமாறு பாராளுமன்ற உறுப்பினரிடம் கோரப்பட்டுள்ளது.நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் இராஜாங்க அமைச்சருக்குத் தண்டனை வழங்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது. (அ)

# முழு நாட்டையும் முதலீட்டு வலயமாக்குமாறு யோசனை

கொழும்பு, ஒக். 06

முழு நாட்டையும் முதலீட்டு வலயமாக உருவாக்கி முதலீட்டு வருமானத்தை அதிகரிக்க வேண்டியது நாட்டின் தற்போதைய தேவையாக உள்ளது என அமைச்சர் நஸீர் அகமட் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் நிதி நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு தந்திரோபாய முதலீட்டு நடவடிக்கைகள் அவசியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிதியமைச்சின் வரி சட்ட மூலம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது நாம் முதலீடுகளின் மூலம் குறைந்த வருமானத்தையே ஈட்டி வருகின்றோம்.

மலேசியா பங்களாதேஷ் போன்ற நாடுகள் கூட முதலீடுகளில் முன்னிலை வகிக்கின்றன. உலகளாவிய வலைப்பின்னலின் ஒரு பாகமாக மலேசியா மாறியுள்ளது. முதலீடுகளிலும் பொருளாதாரத்திலும் அது வெகுவாக முன்னேறியுள்ளது.

போட்டித் தன்மையுடனான முதலீடுகள் அவசியம். கவர்ச்சியான வரிச்சலுகைகளை வழங்குவதும் முதலீடுகளை ஊக்குவிக்க உறுதுணையாக அமையும் என்றும் தெரிவித்தார். (அ)

## தொலைபேசிக் கட்டணம் மீண்டும் உயர்த்தப்பட்டது

கொழும்பு, ஒக். 06

தொலைபேசி நிறுவனங்கள் நேற்று முதல் மீண்டும் தொலைபேசி கட்டணத்தை அதிகரித்துள்ளன.

இம்மாதம் முதல் 2.5 சதவீத சமூகப் பாதுகாப்பு வரியை விதிக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக தொலைபேசிக் கட்டணத்தை உயர்த்த வேண்டியுள்ளதாக தொலைபேசி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்த கட்டண உயர்வு குறித்து சம்பந்தப்பட்ட தொலைபேசி நிறுவனங்கள் விரிவான தகவல்களை வெளியிட உள்ளன. (அ)



# வவுனியாவில் வெடிகுண்டு மீட்பு!

வவுனியா, ஒக். 06

வவுனியா வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக, நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட மலசல கூடத்தை புனரமைக்கும் பணியை மேற்கொண்டிருந்தபோதே குறித்த வெடிகுண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்போது 60 மில்லிமீற்றர் குண்டு ஒன்றையும் கைக்குண்டு ஒன்றையும், சிறிய ரக மிதிவெடி ஒன்றையும் பொலிஸார் இனங்கண்டனர்.

இது தொடர்பான மேலதிக தகவல் எதுவும் வெளியாகாத நிலையில், நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# 60 வயதுடன் கட்டாயமான ஓய்வு; வீடு செல்லும் 800 வைத்தியர்கள்!

கொழும்பு, ஒக். 06

60 வயதுடன் கட்டாய ஓய்வு குறித்த சுற்றறிக்கையின் காரணமாக 300 விசேட நிபுணர்கள் உட்பட 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 800க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் உபுல் கலப்பத்தி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இப்பிரச்னைகள் காரணமாக நாட்டில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட உள்ளதாக தெரிவித்த கலப்பத்தி எம்.பி, இந்த பிரச்னைகள் காரணமாக கொழும்புக்கு வெளியே உள்ள வைத்தியசாலைகள் மூடப்படும் ஆபத்து காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இதன்போது அங்கு உரையாற்றிய உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த, சேவையின் அவசியத்தை கருத்தில் கொண்டு ஓய்வு பெறும் வைத்தியர்கள் தொடர்பில் தலையீடு செய்து ஆராய்வதாகவும் குறிப்பிட் டார். (அ)

ஈழநாடு



## அணு ஆயுத நாடாக பிரகடனம் :

# முடிவிலா அணுவாயுத ஆபத்தில் கொரிய தீபகற்பம் வறுமையில் வாடும் வடகொரிய மக்கள்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

கொரிய தீபகற்ப பகுதிகளில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலான அணு ஆயுத நிலைமையினால் உலக அமைத்திக்கு ஏற்படக் கூடிய ஆபத்தினை கருத்தில் கொண்டு, உடனடியான அமைதி நிலையை உருவாக்க வேண்டியதன் அவசியம் சர்வதேச நாடுகளுக்கு எழுந்துள்ளது.

கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதக் குறைப்பு தொடர்பில் நீண்டகாலமாக ஐ.நா சபை முயற்சித்து வந்துள்ளது.

ஆயினும் தற்போதய நிலையில் அமைதியை நோக்கி வடகொரியாவை இட்டுச் செல்ல பன்னாடுகளின் இராஜதந்திர மற்றும் வெளிவிகார கொள்கைகள் தோற்றுப் போய்விட்டனவா என ஐயமுற வேண்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் கவனத்திற்குட்பட்டுள்ள வட கொரிய அணு ஆயுத ஆபத்து குறித்து உலக நாடுகள் அதிக கவனத்தில் கொள்ள வேண்டிய காலம் வந்துள்ளது. ஆனால் வட கொரியாவின் தொடர் அச்சுறுத்தலான நடவடிக்கைகள் பல நாடுகளுக்கும் கவலையளிப்பதாக உள்ளது.

### அணு ஆயுத நாடாக பிரகடனம்

வடகொரியா தன்னை அணு ஆயுத நாடாக அறிவிக்கும் சட்டத்தை இயற்றியுள்ளதாக அரச செய்தி நிறுவனமான கேசிஎன்ஏ கடந்த மாதம் தெரிவித்துள்ளது.

தன்னைப் பாதுகாத்துக் கொள்ள, அணு ஆயுதத் தாக்குதலுக்கு முன்பான தாக்குதலைப் பயன்படுத்துவதற்கு நாட்டின் உரிமையையும் சட்டம் உறுதி செய்கிறது என்று வடகொரியா தற்போதுஅணு ஆயுத நாடாக தன்னைப் பிரகடனம் செய்து கொண்டுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராக அணு ஆயுத தாக்குதலை நடத்த வடகொரியா முழுஅளவில் தயாராக இருக்கிறது என அதன் தலைவர் கிம் ஜாங் அன் தலைநகர் பியாங்கியாங்கில் கடந்த ஜீலை அதிரடியாக கூறினார்.

### கிம் ஜாங் அன் அதிரடி அறிவிப்பு

கொரிய போரின் 69-வது ஆண்டு தின கொண்டாட்ட நிகழ்ச்சியில் வடகொரிய தலைவர் கிம் ஜாங் அன் கலந்து கொண்டு பேசினார். கடந்த ஜீலையில் அவர் பேசியபோது,

போர் நடந்து 70 ஆண்டுகள் கழித்தும், தென்கொரியாவுடன் சேர்ந்து கொண்டு, வடகொரியாவுக்கு எதிராக ஆபத்து நிறைந்த, சட்டவிரோத பகைமை விளைவிக்கும் செயல்களில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. அமெரிக்கா தனது செயல்களுக்கு ஆதரவு சேர்க்கும் வகையில் வடகொரியாவை அச்சுறுத்த முயற்சிக்கிறது என்று அவர் கூறினார்.

அமெரிக்காவுடனான மோதல் போக்கு அணு ஆயுத ஆபத்துகளை உருவாக்கி விட்டது. சுய பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை வடகொரியா எடுக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டு விட்டது என்றும் கிம் ஜாங் அன் கூறினார். எந்த நெருக்கடியையும் எதிர்கொள்ள எங்களுடைய ஆயுத படைகள் முழு அளவில் தயாராக உள்ளன. அமெரிக்காவுடனான எந்த ஒரு ராணுவ மோதலையும் எதிர்கொள்ள, வடகொரியா முழுஅளவில் தயாராக இருக்கிறது என்று மீண்டும் தெளிவுப்படுத்தி கூறினார்.

### அணு ஆயுத சோதனை

வடகொரியாவின் தலைவராக கிம் ஜாங் அன் 2011-ம் ஆண்டு பதவியேற்றது முதல் தொடர்ச்சியாக சக்தி வாய்ந்த ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை அந்நாடு சோதித்து வந்தது. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் தீர்மானங்களை மீறி இந்த சோதனைகளை நடத்தியதால் வடகொரியா மீது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடுமையான பொருளாதார தடைகளை விதித்தன.

அந்நாட்டின் தலைவர் கிம் ஜாங்-உன் இந்த முடிவை மாற்ற முடியாது என்றும், அணு ஆயுத ஒழிப்பு தொடர்பான பேச்சு வார்த்தைக்கான சாத்தியத்தை நிராகரித்தார் என்றும் அமெரிக்கா குற்றம் கூறியது.

### வடகொரியாவை வாட்டும் வறுமை

தற்போது வடகொரியா தன்னை ஆயுத நாடாக பிரகடனம் செய்து கொண்டாலும், வடகொரியாவை வாட்டும் வறுமை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

கொரிய போரின் பின்னர் 1950களில் விவசாயத்தில் அமல்படுத்தப்பட்ட கூட்டு சமத்துவ முறையால் உணவு பங்கீடு முறையானது எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. மிக மலைப்பாங்கான வட கொரிய நாட்டில் 18 வீத நிலமே விவசாயத்திற்கு ஏற்றதாக இருப் பதும் ஒரு காரணம்.



மின்சக்தி மற்றும் உரப் பற்றாக் குறைப் பிரச்சினைகளும் உள்ளன. அது தவிர, வறட்சியும் வெள்ளமும் மாறி மாறித் தாக்குகின்றன. 1990இல் இந்நாடு கடும் பஞ்சத்திற்கு உள்ளானது.

வடகொரியாவின் 2 கோடியே 30 லட்சம் மக்களுக்கு 50 லட்சம் டன் அரிசியும் தானியங்களும் தேவைப்படுகின்றன. விவசாய விளைச்சல் தேவையைக் காட்டிலும் மிகவும் பின்தங்கியுள்ளது.

### 20 லட்சம் மக்கள் பட்டினிச் சாவு

1990இல் கடும் பஞ்சத்திற்கு பட்டினியால் மாண்டவர்களின் எண்ணிக்கை 20 லட்சம் வரை இருக்கும் என சர்வதேச நாடுகளால் குற்றஞ் சாட்டப்படுகிறது. பட்டினிச் சாவு தொடர்ந்த போதும் வடகொரியா ஏவுகணைச் சோதனைகளை நிகழ்த்தியது. இதனால், நட்புறவு ரீதியாக ஐந்து லட்சம் டன் உணவுப் பொருளை வழங்க முன்வந்திருந்த தென் கொரியா அதை நிறுத்திவைத்தது.

1995இலிருந்து வடகொரியாவில் ஐ.நா.வின் உலக உணவுச் செயல் திட்டம் பணியாற்றிவருகிறது. இப்போது 13 ஆட்சி மாகாணங்களில் 19 லட்சம் பேருக்கு உணவு வழங்கிவருகிறது

யூனிசெஃப் மேற்கொண்ட ஆய்வொன்று சுமார் 40 வீத குழந்தைகளும் 30 வீத தாய்மார்களும் கடுமையான ஊட்டச் சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கிறது. வடகொரியாவின் அணு ஆயுத திட்டங்களால் அதன் உணவுப் பிரச்சினை உலக நாடுகளின் கண்களில் படுவதேயில்லை என்றும் கருதப்படுகிறது.

### நீண்ட கால அணுசக்தி ஆராய்ச்சி

1990 களின் ஆரம்பத்தில் வட கொரியாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தபோது, அமெரிக்கா, இரு தரப்பு கொரியாக்களை நீண்டகாலமாக மறு ஒழுங்கமைக்க முயன்றது. இதன் மூலம் வட கொரியாக்கு சர்வதேச உதவிக்கான வாய்ப்புகளை ஊக்குவிக்கும் என்றும் நம்பியது. ஆயினும் நீண்ட தாமதங்களால் ஏமாற்றம் அடைந்த வட கொரியா பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் வழக்கமான ஆயுதங்களை பரிசோதித்தது. தென் கொரியா மற்றும் ஜப்பானுக்கு வெளிப்படையான அச்சுறுத்தலாக இது அமைந்தது.

1998 ஆம் ஆண்டில், வட கொரியா கும்காங்-ஆரில் ஒரு புதிய மையத்தில் அணுசக்தி நடவடிக்கைகளை மீண்டும் தொடங்கியது என்று ஒப்புக் கொண்டது. வட கொரியா அணுசக்தி பரிசோதனையை துவக்கிய பின் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், ஐ.நா.வின் சர்வதேச அணுசக்தி ஆணையத்திடம் உடன் அணுவாயுதங்களை பாதுகாக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

ஐ.நா சபையால் வட கொரியா அணுவாயுதங்களை அபிவிருத்தி செய்வதற்காக அதன் அணுசக்தி திட்டத்தை பயன்படுத்தக்கூடாது என்றும், அதன் முக்கிய அணுசக்தி ஆராய்ச்சிக்கான யாங்க்பொன்யோவில் வழக்கமான பரிசோதனையை அனுமதிக்க ஒப்புக் கொண்டது.

### அணுசக்தி கூட்டு பிரகடனம் :

1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வட கொரியாவும் தென்கொரியாவும் கொரிய தீபகற்பத்தின் அணுசக்தி பிரகடனத்தின் கூட்டு பிரகடனத்தில் கையெழுத்திட்டன. இரு நாடுகளும் அணு சக்தியை சமாதான நோக்கங்களுக்காக பயன்படுத்த ஒப்புக் கொண்டன. இருப்பினும் 1992 ஆண்டுகளில், வட கொரியா ஐ.நா.வின் அணுவாயுத பரவல் தடை உடன்படிக்கையில் இருந்து விலகுவதாக அச்சுறுத்தியது. மேலும் ஐ.ஏ.இ.ஏ உடன்படிக்கைகளை நிராகரித்ததன் மூலம் அதன் அணுசக்தி நடவடிக்கைகளை யாங்சைனில் வெளியிட மறுத்து விட்டது.



ஜூன் 1993இல், இரு நாடுகளுக்கிடையில் பதட்டங்கள் அதிகரித்தன. வட கொரியா மற்றும் அமெரிக்கா ஆகியவை ஒருவருக்கொருவர் இறையாண்மைக்கு மரியாதை கொடுக்கவும், ஒருவருக்கொருவர் உள்நாட்டு கொள்கையில் தலையி டக் கூடாது என்று கூட்டு அறிக்கையை வெளியிட் டன.

### வட கொரிய போர் அச்சுறுத்தல்

1994 ம் ஆண்டு மே மாதம் ஐ.நா.மூலம் பொருளாதாரத் தடைகளை கோரியிருந்ததால் வட கொரியா, அமெரிக்கா மற்றும் தென் கொரியாவிற்கு எதிராக போர் அறிவிப்பை மார்ச் 1994 ல் வெளியிட்டது. இதன் பின் ஜூன் 1994 ல், முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் வட கொரியாவிற்கு பயணித்து, அதிபர் கிம் இல் சுங் நிர்வாகத்துடன் அணுசக்தி திட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

2003 முதல் 2007 வரை நடத்தப்பட்ட ஐந்து சுற்றுக்களில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இந்த பேச்சுவார்த்தைகள் வட கொரியாவுக்கு எரிபொருள் உதவி மற்றும் அமெரிக்க மற்றும் ஜப்பானுடனான உறவுகளை இயல்பாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு பதிலாக அதன் அணுசக்தி நிலையங்களை மூடுவதற்கு உடன்பட்டது. ஆயினும் பொருளாதாரத் தடைகள் தொடர்ந்து இருந்தபோதிலும், பியாங்யாங் அரசு 2006 மற்றும் 2017 க்கு இடையில் ஆறு அணுகுண்டு சோதனைகளை நடத்தியது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை மீறும் வகையில், அண்டை நாடுகளை அச்சுறுத்தி அமெரிக்க நிலப்பரப்பு மீது தாக்குதல் நடத்தும் எல்லைக்குள் கொண்டு வரக்கூடிய வகையில் அதன் இராணுவத் திறனை அது தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது.

2019 ஆம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்புடன் வட கொரிய அதிபர் தலைவர் கிம் ஜாங்-உன் இரண்டு முறை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார். அது ஆக்கபூர்வமாக அமையாததால் தொடர்ந்து நீண்ட தூர ஏவுகணைகள் மற்றும் அணுசக்தி சோதனைகளை வட கொரியா மேற்கொண்டது.

### அமெரிக்காவின் இலக்கு

வடகொரியா தன்னை அணு ஆயுத நாடாக அறிவித்த பின்னர் இரு நாடுகளுக்கு இடையேயான பேச்சு வார்த்தை நிறுத்தப்பட்டது. ஜோ பைடன் நிர்வாகம் பியோங்யாங்குடன் பேச விருப்பம் தெரிவித்தாலும், அதிபர் ஜோ பைடன் கிம்மை சந்திப்பாரா என்று கூறவில்லை. பியோங்யாங்கைத் தொடர்புகொள்வதற்கான அதன் முயற்சிகள் இதுவரை பதிலளிக்கப்படவில்லை என்றும் வெள்ளை மாளிகை கூறியுள்ளது.

கடந்த ஆண்டு அமெரிக்கா தனது வட கொரியா கொள்கையை மறுஆய்வு செய்து, கொரிய தீபகற்பத்தில் முழு அணு ஆயுத ஒழிப்பு இலக்கு என்று மீண்டும் வலியுறுத்தியது.

இராஜதந்திரம் மற்றும் கடுமையான தடை ஆகியவற்றின் அணு ஆயுத ஒழிப்பைத தொடருவேன் என்று ஜோ பிடன் கூறினார். ஆனால் தனது நாடு பேச்சு வார்த்தை மற்றும் மோதல் இரண்டிற்கும் தயாராக உள்ளது என்று வட கொரிய அதிபர் கிம் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிய பாதையில் செல்வதற்கு தயாராகுவதன் முதல் அறிகுறி



கலாநிதி ஜெகான் பெரேரா

மக்கள் போராட்டங்களைக் கையாளுவதில் அரசாங்கத்தின் அடங்குமுறைக் கொள்கைக்கு ஒரு தடுப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போடுகின்றார் போன்று தெரிகிறது. ஆனால் இதை அவர் எப்போதோ செய்திருக்கவேண்டும்.கொழும்பில் முக்கிய பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனம் செய்யும் வர்த்தமானி அறிவித்தலில் கைச்சாத்திடுவதற்கு அவர் முதலில் எடுத்த தீர்மானம் அரசாங்கத்தின் சொந்த மனித உரிமைகள் ஆணைக் குழு உட்பட மனித உரிமைகள் அமைப்புக்களின் கடுமையான கண்டனத்துக்குள்ளானது. பாதுகாப்புத் துறையினால் மேற்கொள்ளப்பட்டதாக தெரிகின்ற இந்த தீர்மானம் வர்த்தக மற்றும் தொழிற்துறை நடவடிக்கைகளுக்கு பாதகமாக அமையும் என்று வர்த்தக சமூகமும் முறைப்பாடு செய்தது.

உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனத்தின் ஐயப்பாடான சட்ட முகாந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அது ரத்துச் செய்யப்பட்டமையை விளங்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கிறது. உயர் பாதுகாப்பு வலயங்கள் உத்தியோகபூர்வ இரகசியங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழேயே பிரகடனம் செய்யப்படவிருந்தன. அறிவிக்கப்பட்ட புதிய ஒழுங்கு விதிகளுக்கும் அந்த சட்டத்துக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

போர்க் காலப்பகுதியில் வடக்கிலும் கிழக்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்ட உயர் பாதுகாப்பு வலயக் கோட்பாடு முன்கூட்டியே விசேட அனுமதியைப் பெறாமல் வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதைக கூட பெரும் சிக்லானதாக்கியிருக்கும். அரசியலமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கும் உரிமைகள் மீறப்படுவதாக முறையிட்டு உயர் நீதிமன்றத்தில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்புக்கு விடப்படவிருக்கும் இலங்கை மீதான தீர்மானத்தையும் ஜனாதிபதி கவனத்தில் எடுத்திருக்கக்கூடும்.

அந்த தீர்மானத்துக்கு 26 நாடுகள் இணை அனுசரணை வழங்குவதற்கு இணங்கியிருந்தன. அவற்றில் பத்து நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தற்போது உறுப்புரிமையைக் கொண்டிருக்கின்றன. மனித உரிமைகள் விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் பார்வையில் இலங்கை தனிமைப்படுத்தப்பட்டு நிற்கிறது. அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் நாட்டுக்கு இப்போது அவசியமாக தேவைப்படுகின்ற சர்வதேச அனுதாபத்தையும் ஆதரவையும் குறைத்துவிடலாம்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் கடந்த கால செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், மக்கள் கிளர்ச்சியை கையாளுவதில் மிகவும் வேறுபட்ட முறையில் நுட்பமான அணுகுமுறையைக் கையாளுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. அதனால் போராட்ட இயக்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு படைகளை பயன்படுத்துவதில் அவர் காட்டிய நாட்டம் அதிர்ச்சியை தந்தது. உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனத்தை ரத்துச் செய்ததைத் தொடர்ந்து ஜனாதிபதி போராட்ட இயக்கத்தை கையாளுவதில் அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கையையும் மாற்றியமைப்பது குறித்து சிந்திக்கவேண்டியது அவசியமாகும். போராட்ட இயக்கம் தொழிற்சங்க நடவடிக்கைகள் மற்றும் வீதிகளில் குழப்பநிலை மூலமாக பொருளாதாரத்தை மேலும் நிலைகுலையச் செய்துவிடும் என்ற நியாயப்பாட்டின் அடிப்படையில் அதை ஒடுக்குவதிலேயே இதுவரையான அரசாங்கம் அதன் கவனத்தைக் குவித்தது.

ஆனால் இலங்கையின் ஜனநாயக முறைமையில் ஒடுக்குமுறைக் கொள்கை பயன்தருவது சாத்தியமில்லை. தேர்தல்களுக்கு போவதற்கு தயங்குகின்ற ஒரு அரசாங்கம் தன்னைப் பாதுகாக்க பாதுகாப்பு படைகளைப் பயன்படுத்தக்கூடாது. இந்த யதார்த் தத்தை ஏற்றுக்கொண்ட ஒன்றாகவே கொழும்பில் உயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனத்தை வாபஸ் பெற்றுக்காண்ட ஜனாதிபதியின் செயலை நோக்கலாம்.

**மன்னிப்பு பிரகடனம்**

இலங்கைக்கு பெருமளவு சர்வதேச உதவிகளைப் பெறுவதற்கு பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொறுப்பை திறமையாக கையாளக்கூடியவர் ஜனாதிபதி விக்கிரமசிங்க என்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. வெளிநாடுகளுக்கான தனது அண்மைய விஜயங்களின்போது முக்கியமான உலகத் தலைவர்களைச் சந்தித்து பேசி தனக்கென ஒரு அங்கீகாரத்தை ஜனாதிபதி பெற்றிருக்கிறார். ஆனால் இலங்கை மக்களின் அங்கீகாரத்தையும் அவர் பெறவேண்டியது முக்கியமானதாகும்.தனக்கு வாக்களிக்காத மக்களின் நம்பிக்கையை அவர் வென்றெடுக்கவேண்டிய தேவை இருக்கிறது.

பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதை தொடர்ந்து தனது நிலையை வலுப்படுத்திக்கொண்ட ஜனாதிபதி போராட்ட இயக்கம் உருவெடுத்ததற்கான அடிப்படைக் காரணிகளைக் கையாளுவதில் முனைப்புடன் செயற்படவேண்டுமேயன்றி, அதன் வெளிப்பாடுகளை அழிப்பதில் தீவிரம் காட்டலாகாது. பொருளாதார நெருக்கடி சனத்தொகையில் வறிய பிரிவினர் மீது ஏற்படுத்தியிருக்கும் படுமோசமான தாக்கத்தை நேரடியாக கையாளுவதற்கு அரசாங்கம் எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கப்போகிறது என்பதை நாட்டு மக்களுக்கு கூறவேண்டியது அவசியமாகும்.

போராட்ட இயக்கத்தில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்டவர்கள் சட்டத்தின் கொடுங்கரங்களினால் வதைக்கப்படக்கூடாது என்ற அபிப்பிராயம் மக்கள் மத்தியில் பரந்தளவில் இருக்கிறது. தற்போது ஜெனீவாவிலும் இலங்கையிலும் அரசாங்கத்தின் பேச்சாளர்கள் நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சிகைளின் கடுமையை நிராகரிக்கின்றார்கள். போர்க் காலப்பகுதியில் இடம்பெற்ற அத்துமீறல்களை அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசாங்கங்கள் ஜெனீவாவிலும் உள்நாட்டலும் நிராகரித்தன.

இனத்துவ சமூகங்களை ஒன்றுடன் மற்றதை மோதவிட்ட இனப்பிரச்சினையின் தன்மையின் விளைவாக போர்கால அத்துமீறல்களை நிராகரித்த அரசாங்கங்ளின் போக்கை சனத்தொகையில் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளக்கூடிய மனோபாவத்தைக் கொண்டிருந்தனர். ஆனால், பொருளாதார நெருக்கடி வறியவர்கள் மீது ஏற்படுத்துகின்ற தாக்கத்தை நிராகரிப்பது இலங்கையில் எந்த சமூகத்திடம் இருந்தும் அரசாங்கத்துக்கு ஆதரவை கிடைக்கச் செய்யாது. அறகலயவின் உச்சக்கட்டத்தில் நடந்தததைப் போன்று பெரும்பான்மையான மக்களை அரசாங்கத்துக்கு எதிராகவே திருப்பிவிடும்.

போராட்ட இயக்கத்தில் பங்கேற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டவர்கள் சகலருக்கும் பொது மன்னிப்பை பிரகடனம் செய்வதே அரசியல் முதிர்ச்சியும் விவேகமும் கொண்ட ஒரு தலைவருக்கு உகந்த செயலாக இருக்கும். இந்த கைதுகள் தொடர்பிலான சர்ச்சை தேசிய, சர்வதேச மட்டங்களில் மனித உரிமைகள் அமைப்புக்கள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியிருக்கும் அக்கறையை கவனத்தில் எடுத்து இத்தகைய ஒரு மனமனிப்பை ஜனாதிபதி அறிவிக்கவேண்டும்.

போராட்ட இயக்கத்தில் பங்கேற்ற சிலர் வன்முறைகளில் ஈடுபட்டார்கள் அல்லது அந்த வன்முறைகளை ஆதரித்தார்கள் என்ற அடிப்படையில் அவர்களை கைது செய்யும் தற்போதைய நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்படுகின்றன. பெறுமதியான கலை வேலைப்பாடுகளையும் குடும்ப நூலகத்தையும் கொண்டிருந்த ஜனாதிபதியின் சொந்த பரம்பரை வீடு உட்பட அரசாங்க அமைச்சர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்களில் சம்பந்தப்பட்டதாக ஏனையவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். சிலர் நீதிமன்றங்களின் முன் குற்றஞ்சாட்டப்படாமலேயே கைது செய்யப்படுகிறார்கள்.

பெருந்தன்மை, மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்வது, நேர்மை ஆகியவை சமுதாயத்தை பிணைக்கின்ற சக்திமிகு பண்புகளாகும். உள்நாட்டுப்போரின்போதும் ஜனதா விமுக்தி பெரமுன கிளர்ச்சியின்போதும் தங்கள் சொந்த வீடுகளை இழந்த மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு தனது பெருந்தன்மையை வெளிக்காட்டுவதற்கு ஜனாதிபதிக்கு இது ஒரு சந்தர்ப்பமாகும்.

தங்கள் வீடுகளை இழந்த அரசாங்க உறுப்பினர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிடுகிறது. அரசாங்கத்தின் தவறுகளினால் உயிர்களை இழந்தவர்களின் குடும்பத்தவர்களுக்கும் - குறிப்பாக எரிபொருட்களை பெறவதற்காக நீண்ட வரிசைகளில் இரவுபகலாக காத்திருந்து மரணமடைந்தவர்கள் மற்றும் தரம் குறைந்த சமையல் எரிவாயு சிலிண்டர்கள் வெடித்ததனால் உரிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு - இழப்பீடுகளை வழங்கவேண்டியது அவசியமாகும்.

**உண்மையை ஏற்றுக்கொள்தல்**

சிறுவர்களை பாதிக்கின்ற சத்துணவுப் பற்றாக்குறை மற்றும் குறை வளர்ச்சி தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்புகள் மற்றும் சராவதேச அமைப்புக்களினால் செய்யப்பட்ட ஆய்வுகளின் உண்மைத்தன்மையை அரசாங்கம் தற்போது நிராகரிக்கிறது. கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் கூட, எரிபொருள் கொள்வனவு மற்றும் பெரிய ஒப்பந்தங்களில் இடம்பெறுவதாகக்கூறப்படுகின்ற ஊழல்களையும் அவர்கள் நிராகரிக்கிறார்கள். இத்தகைய போக்கு பிரச்சினைகளைத் தணிப்பதற்கு கிஞ்சித்தும் உதவாது. நியாயமான பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மற்றும் மின்சார விநியோகங்களை சுட்டிக்காட்டி அரசாங்கம் வழும் நிலை ஏற்படுவது போன்ற எண்ணத்தை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால், உயர்ந்த விலைகளில் வாங்கக்கூடியவர்களுக்கே பாவனைப் பொருட்கள் கிடைக்கின்றன.

ஏற்றத்தாழ்வான விநியோகத்தின் சுமையை அரசாங்கம் நிராகரிப்பதை மக்கள் ஏற்றுக்கொள்வதாக இல்லை. உறுதியான அரசியல் சூழ்நிலையில் ஆட்சி செய்யவேண்டுமானால் இந்த மக்களின் ஆதரவு அரசாங்கத்துக்கு தேவை.

பிரச்சினைகள் இல்லை என்று நிராகரிப்பதற்கு பதிலாக பிரச்சினைகள் இருப்பதை ஏற்றுக்கொண்டு அவற்றை தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இது நாட்டுக்குள் நிலவுகின்ற பிரச்சினைகளுக்கம் சர்வதேச ரீதியாக விவாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளுக்கும் பொருந்தும். நிராகரிப்புகள் ஜெனீவாவில் எடுபடவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதன் காரணத்தினால்தான் ஒன்பது தீர்மானங்களை அரசாங்கம் எதிர்நோக்கவேண்டியேற்பட்டது. ஒவ்வொரு தீர்மானமும் படிப்படியாக கடுமையானவையாகி கையாளுவதற்கு சிக்கலானவையாக மாறின.

இவ்வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்புக்கு விடப்படும் தீர்மானம் ஐ.நா.வின் சான்றுகள் சேகரிக்கும் பொறிமுறைக்கு மேலும் கூடுதல் ஆதரவைக் கோருகிறது. இலங்கையின் அரசியல் மற்றும் இராணுவ தலைவர்களினால் இழைக்கப்பட்டிருக்கக்கடிய குற்றங்களை உலகின் எந்தப் பகுதியிலும் நாடுகள் விசாரணை செய்வதற்கு சர்வதேச நியாயாதிக்கத்தை பயன்படுத்துவதற்கு ஆதரவை வழங்குவதற்கே அந்த பொறிமுறை அமைக்கப்பட்டது.


சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவதற்கு கிடைக்கக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அரசாங்கம் இயன்றவரை பயன்படுத்தவேண்டும். மனித உரிமைகள் பேரவையில் தீர்மான வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் சர்வதேச சமூகத்தின் பார்வை இலங்கை மீது குவிந்திருக்கிறது. வியாழனன்று வாக்கெடுப்புக்கு விடப்படவிருக்கும் தீர்மான வரைவில் மாற்றங்களைச் செய்வதற்கு காலம் கடந்துவிட்டது என்கிற அதேவேளை, தீர்மானத்தை முன்னெடுக்கின்ற நாடுகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு இன்னமும் கூட அரசாங்கம் முயற்சிக்கமுடியும்.

போராட்ட இயக்கத்தில் பங்கேற்றதற்காக கைது செய்யப்பட்டிருப்பவர்களுக்கு மன்னிப்பை அளிப்பதாக அறிவித்தால் அதனால் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்தின் அக்கறைகளுக்கு செவிசாய்க்க அரசங்கம் தயாராயிருக்கிறது என்ற சமிக்ஞையை கொடுக்கமுடி யும். கடந்த கால உரிமை மீறல்கள், அவற்றுக்கான கவலை தெரிவிப்பு மற்றும் பொறுப்புக்கூறலை அங்கீகரிக்கினாற உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றின் அங்கமாக இந்த மன்னிப்புக்கான சாத்தியம் குறித்து ஆராயமுடியும்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122, 124, 126, ............., ...........          ii) 18, 15, 12, ............., ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

...................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

...........................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...................................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

.....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.....................................................          (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)      2)      3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி     2) இரணைமடுக்குளம்     3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்     2) உதிப்பு     3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்     2) வாளேந்திய சிங்கம்     3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976     2) 1851     3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு     2) இறப்பர், தாழம்பூ     3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6     2) 8
**19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130     2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745
**23.** 455
**24.** 11100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190     2) 100     3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1     **31.** 2     **32.** 3
**33.** 2     **34.** 3     **35.** 2

### கல்வி tv CHANNEL-1 — வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2 — 06.10.2022 வியாழக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவருக்கு மட்டக்களப்பு வர்த்தகர் சங்கத்தினால் கௌரவம்

மட்டக்களப்பு, ஒக். 06
மட்டக்களப்பு வர்த்தகர்கள் சங்கம் நடாத்தும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் 2021 வருடத்தில் உயர் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான விசேட கௌரவிப்பு விழா மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் விடுதியில் மிகப்பிரமாண்டமான முறையில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வர்த்தக சங்கத் தலைவரும் சமூக சேவையாளருமான தேச பந்து முத்துலிங்கம் செல்வராஜா தலைமையில் இடம்பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திசாநாயக்க மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், மாணவர்களுக்கான கௌரவிப்பினையும் வழங்கினர்.

பாரம்பரிய மங்கள வாத்திய இசை முழங்க அதிதிகள் மலர் மாலைகள் அணிவித்து வரவேற்கப்பட்டமையினை தொடர்ந்து, வரவேற்புரை, வரவேற்பு நடனம், தலைமையுரை, அதிதிகளின் விசேட உரைகள் இடம்பெற்று, கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறு



பேற்றினைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள 163 மாணவர்களுக்கு இதன் போது பொன்னாடை போர்த்தி பதக்கங்கள் அணிவித்து நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

தேசிய ரீதியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான துறையில் அகில இலங்கை ரீதியில் முதலாவது இடத்தை பெற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மட்டக்களப்பு புனித மிக்கேல். கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவன் தமிழ்வாணன் துவாரகேஷ், பௌதிக விஞ்ஞான துறையில் அகில இலங்கை மட்டத்தில் நான்காவது இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் சாதித்த செங்கலடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவன் லோகிதன் கிசோபன் மற்றும் கதிரவெளி விக்னேஸ்வரா மாணவன் எஸ். டினுகரன் ஆகியோர் இதன் போது விசேட நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)



## கிழக்கு பிரதம செயலாளர் கடமையை பொறுப்பேற்பு

திருமலை, ஒக். 06
கிழக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்ட ஆர்.எம்.பி.எப்.ரத்நாயக்க நேற்றுமுன்தினம் திருகோணமலை பிரதம செயலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதிப் பிரதம செயலாளர்கள், கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண திணைக்களங்களின் பணிப்பாளர்கள், மாகாண ஆணையாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர். (அ)

## மகளிர் அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளுக்கு வலுவூட்டல்

அம்பாறை, ஒக். 06
இலங்கையில் பாலியல் பாலின அடிப்படையிலான வன்முறைகளைத் தணிக்கவும், சமூக ஒற்றுமையை மேம்படுத்தவும் பெண்களை அதிகாரமளித்தல் எனும் கருப்பொருளின் கீழ் கிழக்கு திரிய பெண்கள் அபிவிருத்தி மன்றத்தினால் தெரிவு செய்யப்பட்ட பெண்கள் அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகளுக்கான ஒருநாள் வலுவூட்டல் செயலமர்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.



இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட நலிவுற்ற மற்றும் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களில் ஏற்படும் பாலின அடிப்படையிலான வன்முறைகள், அவற்றை குறைப்பதற்கான வழிமுறைகள், குடும்ப சமூக ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள், பெண்களுக்கான சட்ட ஆலோசனைகள், குடும்ப வன்முறைகளினால் ஏற்படும் உளவியல் பிரச்னைகளும் அவற்றுக்கான ஆலோசனைகளும் போன்ற தலைப்புக்களை உள்ளடக்கி இச் செயலமர்வு நடத்தப்பட்டது.

இச்செயலமர்விற்கு வளவாளர்களாக நிறுவனத்தின் ஆலோசகர் சட்டத்தரணி ஏ.சாஜித் அஹமட், சட்டத்தரணி எல்.கலைவாசனா, சமூக செயற்பாட்டாளர் ஐ.எல். ஹாசிம் சாலிஹ், உளவளத் துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப், செயற்திட்ட உத்தியோகத்தர் பி.எம். கலாமுடீன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)



## நாவிதன்வெளி அன்னமலை பாடசாலையில் வாணி விழா

அம்பாறை, ஒக். 06
சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் வருடாந்த நாமகள் விழா நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை அதிபர் சீ. பாலசிங்கன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் பாடசாலை மேம்பாட்டு திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக சமூக சேவையாளர் இந்திரன் ரூபசாந்தன் கலந்து கொண்டார்.

மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள் மேடையேறின.

பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரனின் ஏற்பாட்டில் உதவி அதிபர் என்.வன்னிய சிங்கம் சிரேஸ்ட ஆசிரியர் என். கோடீஸ்வரன் ஆகியோரின் வழிநடத்தலில் விழா சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாணவர்கள் அனைவருக்கும் பிரதம அதிதி வேதசகா ஆன்மீக நூல்களை பரிசளித்தார். இறுதியில் விஷேட பூசை இடம் பெற்றது. (அ)

## கல்முனை சிங்கள மகா வித்தியாலய மாணவர்களின் சிறுவர் தின நிகழ்வு

கல்முனை, ஒக். 06
உலக சிறுவர் தினத்தை யொட்டி அம்பாறை கல்வி வலயத்தில் கல்முனை சிங்கள மகா வித்தியாலய மாணவர்களின் சிறுவர் தின சிறப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் லக்ஸ்மன் ஹேமகுமாரவின் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்விற்குப் பிரதம அதிதியாக ரஹ்மத் பௌண்டசன் பிரதானியும், கல்முனை மாநகர பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூர் கலந்து கொண்டு மாணவர்களின் போசாக்கு, பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், கல்வி மேம்பாடுகள் தொடர்பில்



உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் பாடசாலை முகாமைத்துவ சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# உக்ரைன் மீது அணுகுண்டு வீசுமாறு கோருகின்றார் செச்சினியத் தலைவர்

## தனது மூன்று புதல்வர்களை களம் அனுப்ப அவர் தயாராம்



மொஸ்கோ, ஒக். 06

உக்ரைனில் ரஷ்யப் படைகள் சந்தித்துவரும் பின்னடைவுகள் புடினின் ஆதரவாளர்களை உற்சாகமிழக்கச் செய்துள்ளன. மொஸ்கோவின் போர் முயற்சிகள் போதாது என்று குறிப்பிட்டுள்ள செச்சினியக் குடியரசின் தலைவர் ரம்ஷான் கடிரோவ், இராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து குறைந்த விளைவுகள் கொண்ட அணு ஆயுதங்களை உக்ரைன் மீது பிரயோகிக்குமாறு அதிபர் புடினிடம் கேட்டிருக்கிறார். அத்துடன் பதின்ம வயதுகளையுடைய தனது மூன்று புதல்வர்களையும் உக்ரைன் போர்க்களத்துக்கு அனுப்பத் தயார் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியிருக்கிறார்.

ரஷ்ய இராணுவத்தின் முன்னாள் லெப்டினன்ட் ஜெனரலும் தற்போதைய செச்சினியக் குடியரசின் தலைவருமாகிய ரம்ஷான் கடிரோவ், அதிபர் புடினுக்கு மிக நெருக்கமானவர். அவரது "வேட்டை நாய்" என்று வர்ணிக்கப்படுபவர். உக்ரைனின் கிழக்கே டொனெட்ஸ்க் பிராந்தியத்தில் உள்ள மூலோபாய முக்கியத்துவம் மிக்க லைமன் என்ற நகரில் இருந்து ரஷ்யப்படைகள் பெரும் இழப்புக்களுடன் பின்வாங்க நேர்ந்துள்ளது. அந்த நகரம் உக்ரைன் படைகளது முழுக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. அங்கு ரஷ்யக் கொடிகள் அகற்றப்பட்டு உக்ரைன் கொடிகள் ஏற்றப்பட்டுள்ளன.

இந்தப் பின்னடைவை அடுத்தே செச்சினியத் தலைவர் ரஷ்யப்படைகளது போர்த் திட்டங்களை விமர்சித்துக் கருத்து வெளியிட்டிருக்கிறார். என்னுடைய தனிப்பட்ட கருத்தின் படி, ரஷ்யா அதன் எல்லைகளில் ராணுவச் சட்டத்தைப் பிறப்பித்து குறைந்தளவு விளைவுகள் ஏற்படுத்தும் அணு குண்டுகளை (தந்திரோபாய அணு ஆயுதங்கள்) உக்ரைன் மீது பயன்படுத்துதல் உட்பட கடுமையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் - என்று அவர் கேட்டிருக்கிறார். ரெலிகிராம் நியூஸ் சேவை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

ரஷ்யாவினால் கடந்த வாரம் இணைக்கப்பட்ட பிராந்தியங்களில் ஒன்றாகிய கெர்சன் பகுதியில் உக்ரைன் படைகள் முன்னேறி வருகின்றன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

(அ)



# டுபாயில் இந்து கோயில் நேற்றுமுன்தினம் திறப்பு

டுபாய், ஒக். 06

டுபாயில் கட்டப்பட்டிருக்கும் புதிய இந்து கோயில், நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை திறக்கப்பட்டது.

டுபாயில் ஜெபெல் அலி பகுதியில் அமைந்திருக்கும் குருநானக் தர்பார் என்ற சீக்கிய கோயிலுக்கு அருகே இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது. இந்தக் கோயிலில் 16 தெய்வங்களின் சிலைகள் நிறுவப்பட்டுள்ளன.

அவற்றில் பெரும்பான்மையான சிலைகள் கோயிலின் பிரதான கருவறையிலேயே வைக்கப்பட்டுள்ளன. கருவறையின் மேற்பகுதி மாடம் விரிந்த நிலையிலான இளஞ்சிவப்பு நிறத்தில் முப்பரிமாண வடிவிலான தாமரைப் பூ வரையப்பட்டுள்ளது.

இந்தக் கோயிலை, அதிகாரபூர்வமாக ஐக்கிய அரபு அமீரகத்தின் அமைச்சர் முபாரக் அல் நஹ்யான் நேற்று முன் தினம் திறந்துவைத்தார்.

இருப்பினும், சிறப்பு பூஜைகள் மற்றும் நிர்வாக முன்னேற்பாட்டு பணிகளுக்காக செப்ரெம்பர் முதலாம் திகதியே திறக்கப்பட்டுவிட்டது. அன்று முதல் கோயிலுக்கு ஏராளமான பக்தர்கள் வந்து செல்கின்றனர்.

கோயில் திறக்கப்பட்ட முதல் நாளிலிருந்தே ஏராளமான பக்தர்கள் வருகை தருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக வார இறுதி நாள்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுவதாக கூறப்படுகிறது. கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும், சமூக இடைவெளியை உறுதிப்படுத்தவும் கியூ.ஆர். குறியீடு முன்பதிவு நடைமுறை அடிப்படையில் மட்டுமே பக்தர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு நாளும் 1,000 முதல் 1,200 பக்தர்கள் வழிபாடு நடத்தும் வகையில் முன்பதிவு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

கோயில் காலை 6.30 மணி முதல் இரவு 8 மணி வரை திறக்கப்பட்டிருக்கும். கோயிலில் தரிசனம் செய்ய ஒக்ரோபர் இறுதி வரை வார இறுதி நாள்களுக்கான முன்பதிவு முழுமையாக ஏற்கெனவே முடிந்துவிட்டது. ஒக்ரோபருக்குப் பிறகு எந்தவித கட்டுப்பாடுமின்றி பக்தர்கள் அனுமதிக்கப்படுவர்.

தற்போதைய நிலையில் கோயிலில் 14 பண்டிதர்கள் மூலமாக வேத மந்திரங்கள் மட்டுமே ஓதப்பட்டு வருகின்றன. இவர்கள் 14 பேரும் பிரத்தியேகமாக இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு, தினசரி வழிபாடு நடத்தப்படுகிறது. இவர்கள் காலை 7.30 மணி முதல் 11 மணி வரையிலும், பின்னர் மதியம் 3.30 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் கோயிலில் பூசை செய்கின்றனர்.

(அ)

# கெர்சனில் முக்கிய கிராமத்தை கைப்பற்றியது உக்ரைன் படை!

கீவ், ஒக். 06

உக்ரைனிய படைகள் கெர்சனின் தெற்குப் பகுதியில் உள்ள ஒரு முக்கிய கிராமத்தை கைப்பற்றியுள்ளதாக உக்ரைனில் உள்ள பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனை உறுதிப்படுத்தும் வகையில், டேவிடிவ் பிரிட் மீது உக்ரைனியக் கொடியை 35ஆவது கடற்படையினர் ஏற்றுவதைக் காட்டும் காணொளியை வெளியிட்டது.

அத்துடன், மற்றொரு ரஷ்ய இராணுவப் பின்வாங்கலை தொடர்ந்து, அருகிலுள்ள பல கிராமங்கள் மீண்டும் கைப்பற்றப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சகம் மேலும் கூறியது.

எனினும், ரஷ்யா இன்னும் தெற்கில் பிராந்திய தலைநகரான கெர்சன் நகரத்தை கட்டுப்படுத்துகிறது. ஆனால் உக்ரைனிய மொழியில் டினிப்ரோ என்று அழைக்கப்படும் டினீப்பர் ஆற்றின் வடக்கே உள்ள முழுப் பகுதியில் பல இடங்களில் உக்ரைனிய படையினர் முன்னேறி வருகின்றனர்.

இதனிடையே உக்ரைனின் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியுடனான உரையாடலின் போது, ஹிமார்ஸ் ரொக்கெட் லாஞ்சர்கள் உட்பட 625 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இராணுவ உதவியை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உறுதியளித்தார்.

(அ)



# லெனினின் கடைசி சிலையை அகற்றியது பின்லாந்து அரசு!

ஹெல்சிங்கி, ஒக். 06

சோவியத் யூனியனின் தலைவர் விளாடிமிர் லெனினின் கடைசி சிலையை பின்லாந்து அரசாங்கம் அகற்றியது. இந்நிலையில் குறித்த சிலையை காண நூற்றுக்கணக்கானவர்கள் தென்கிழக்கு நகரமான கோட்காவில் கூடினர்.

இந்த சிலை 1979 ஆம் ஆண்டு தாலின் நகரத்தால் கோட்காவுக்கு பரிசாக வழங்கப்பட்டது.

லெனினின் நினைவுச்சின்னம் "மனித வரலாற்றில் ஜனநாயகமற்ற மற்றும் சோகமான கட்டத்தை" பிரதிநிதித்துவப்படுத்துகிறது, இது "துர்கு நகரத்தின் மதிப்புகளுக்கு இணங்கவில்லை" என்று நகர மேயர் மின்னா ஆர்வ் தெரிவித்தார். (அ)

# அனைத்து வகை கைபேசிகளுக்கும் ஒரே வகையான சார்ஜர் கட்டாயம்!

## ஐரோப்பிய பாராளுமன்றில் அதற்கான சட்டம் அங்கீகாரம்

பரிஸ், ஒக். 06

வீடுகளில் போன் சார்ஜர் வயர்கள் பெருகி வருகின்றன. கண்டபடி குப்பைகளுக்குள் வீசப்படுகின்றன. ஐரோப்பாவில் அடுத்த ஆண்டு முதல் இந்த நிலைமை முடிவுக்குக் கொண்டு வரப்படவுள்ளது.

மொபைல் தொலைபேசிகள் மற்றும் சகல விதமான டிஜிட்டல் மொபைல் சாதனங்களுக்கும் ஒரே வகையான - யுஎஸ்பி-சி சார்ஜர்களைக் கட்டாயமாக்கும் சட்டத்தை ஐரோப்பிய பாராளுமன்றம் நிறைவேற்றியிருக்கிறது.

பிரான்ஸின் ஸ்ரார்ஸ்பூவில் அமைந்துள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தில் இந்தச் சட்டப் பிரேரணை மீது கடந்த செவ்வாய்க்கிழமை (ஒக். 4)நடைபெற்ற வாக்கெடுப்பில் மிகப் பெரும்பான்மையாக 602 உறுப்பினர்களது ஆதரவு வாக்குகள் கிடைத்தன. ஆக 13 வாக்குகள் மட்டுமே எதிராகச் செலுத்தப்பட்டன. இந்தச் சட்டம் சகல உறுப்பு நாடுகளிலும் வாக்கெடுப்புக்கு விடப்படும்.

அப்பிள் உட்பட மொபைல் ஃபோன் தயாரிப்பு நிறுவனங்கள் ஐரோப்பிய மட்டத்தில் பொதுப் பாவனைக்கான சார்ஜர்களைத் தயாரித்து வெளியிடுவதற்கு 2024 ஆம் ஆண்டு வரை அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

மடிக்கணினி போன்ற ஏனைய சில சாதனங்களுக்கு 2026 ஆம் ஆண்டுக்குள் பொதுவான சார்ஜர்கள் அவசியமாக்கப்படவுள்ளது.

ஐரோப்பிய தராதரத்துக்கு உட்பட்டு பொதுவான சார்ஜர்களை வெளியிட வேண்டிய கட்டாயத்தை உருவாக்கவுள்ள இந்தச் சட்டம் ஐ ஃபோன்களைத் தயாரித்து வெளியிடுகின்ற தொழில்நுட்பத்துறை ஜாம்பவான் நிறுவனமாகிய அப்பிள் கம்பனிக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாவனையாளர்களது வசதி கருதியும் பெருகிவரும் இலத்திரனியல் பொருள் கழிவுகளைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுமே இந்தப் பொதுவான சார்ஜர்கள் திட்டம் அமுல்ப்படுத்தப்படவுள்ளது.



பொதுவான சார்ஜர் திட்டம் பாவனையாளர்களது செலவில் மொத்தம் 250 பில்லியன் ஈரோக்களைச் சேமிக்க உதவும் என்று ஐரோப்பிய ஒன்றிய ஆணைக்குழு மதிப்பிட்டுள்ளது. (அ)

# என்னால் இனி கிரிக்கெட் விளையாட முடியாது!

## ஏபி டி வில்லியர்ஸ்

கேப்டவுன், ஒக். 06

அண்மையில் தனது எதிர்கால திட்டம் என்ன என்பதை பகிர்ந்திருந்தார் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் டிவில்லியர்ஸ். ஆனால், அவர் இனி கிரிக்கெட் களத்தில் விளையாடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார். இதனை வலது கண்ணில் அறுவை சிகிச்சை மேற்கொண்ட பிறகு டிவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

மிஸ்டர் 360 டிகிரி என அறியப்படுபவர் டிவில்லியர்ஸ். மொத்தம் 420 சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார். அதன் மூலம் 20,014 ஓட்டங்கள் சேர்த்துள்ளார். இதில் 114 டெஸ்ட், 228 ஒருநாள் மற்றும் 78 இருபது -20 போட்டிகள் அடங்கும். 184 ஐ. பி. எல். போட்டிகளில் விளையாடியுள்ளார். அதிகபட்சமாக றேயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக 156 போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார்.

இந்நிலையில், இனி தன்னால் கிரிக்கெட் விளையாட முடியாது என அவர் தெரிவித்துள்ளார். “அடுத்த ஆண்டு நிச்சயம் நான் சின்னசாமி மைதானத்தில் நிச்சயம் இருப்பேன். ஆர். சி. பி. அணிக்கு ஐ. பி. எல். கிண்ணம் வென்று கொடுக்க தவறியதற்காக ரசிகர்கள் என்னை மன்னிக்கவும். ரசிகர்களின் ஆதரவுக்கும், அன்புக்கும் நன்றி. என்னால் இனி கிரிக்கெட் விளையாட முடியாது. ஏனெனில், எனது வலது கண்ணில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிச்சயம் நான் எந்தவொரு அணியையும் வழிநடத்தப் போவதில்லை. நான் கற்றதை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். 18 ஆண்டுகால பயணத்துக்குப் பிறகு வீட்டில் கொஞ்ச நேரம் செலவிட முடிவதில் மகிழ்ச்சி. எனக்கு வயதாகிவிட்டது. லெஜெண்ட்ஸ் லீக் தொடர் மிகவும் வேடிக்கையாக உள்ளது. எனக்கு அழைப்பு வந்தது. ஆனால், எனக்கு கண்ணில் அறுவை சிகிச்சை நடக்கவிருந்தது. ஒரு கண்ணுடன் என்னால் கிரிக்கெட் விளையாட முடியாது” என அவர் தெரிவித்துள்ளார்.




# ரோஹித் சர்மா மோசமான சாதனை!

இந்தூர், ஒக். 06

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட 20 ஓவர் தொடரில் பங்கேற்றுள்ளது. முதல் இரு ஆட்டங்களில் தோல்வியடைந்து தென்னாபிரிக்க அணி ஏற்கனவே தொடரை இழந்து விட்டது.

இந்த நிலையில் இந்தியா- தென்னாபிரிக்கா இடையிலான 3ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் நடந்தது.

இந்தப் போட்டியில் ரோஹித் சர்மா தான் சந்தித்த 2ஆவது பந்திலே டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார்.

இதன் மூலம் சர்வதேச இருபது -20 கிரிக்கெட்டில் ரோஹித் சர்மா ஒரு மோசமான சாதனைக்கு சொந்தக்காரர் ஆனார். அதாவது சர்வதேச இருபது -20 கிரிக்கெட்டில் அதிகமுறை ஒற்றை இலக்கில் ஆட்டமிழந்த நபர்களின் வரிசையில் இந்திய ரோகித் சர்மா முதல் இடத்துக்கு முன்னேறி உள்ளார்.

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் அதிகமுறை ஒற்றை இலக்கில் ஆட்டமிழந்த நபர்களின் வரிசையில் இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா 43 முறை ஆட்டமிழந்து முதல் இடத்தில் உள்ளார். அவருக்கு அடுத்த படியாக அயர்லாந்தின் கெவின் ஓ பிரெய்ன் 2ஆவது இடத்தில் உள்ளார்.

சர்வதேச இருபது 20 கிரிக்கெட்டில் ஒற்றை இலக்கில் ஆட்டம் இழந்த நபர்களின் வரிசை ரோஹித் சர்மா - 43 முறை, கெவின் ஓ பிரெய்ன் - 42 முறை, முஷ்பிஹர் ரஹீம் - 40 முறை, முகமது நபி - 39 முறை ஷகீட் அப்ரிடி - 37 முறை.




## சம்பியன் வென்றது இந்தியா!

# இறுதி ரி - 20போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி!

இந்தூர், ஒக். 06

இந்தூரில் நடைபெற்ற தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான 3ஆவது இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி தோல்வி அடைந்துள்ளது.

3 போட்டிகள் கொண்ட இருபது - 20 கிரிக்கெட் தொடரில் திருவனந்தபுரத்தில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்திய அணி 8 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. தொடர்ந்து குவாஹாட்டியில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2-வது ஆட்டத்தில் இந்திய அணி 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியை வசப்படுத்தியது. இதன்மூலம் சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக முதன்முறையாக இருபது - 20 கிரிக்கெட் தொடரை இந்தியா கைப்பற்றியது. மூன்றாவது போட்டியிலும் வெற்றி பெற்று தொடரை முழுமையாக 3-0 என கைப்பற்றும் முனைப்பில் களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா களத்தடுப்பைத் தெரிவு செய்தார். துடுப்பாட்டத்துக்கு சாதகமான இந்தூர் ஆடுகளத்தில் பவர்பிளே முடிவதற்குள்ளாகவே தென்னாபிரிக்க அணித் தலைவர் பவுமா தனது விக்கெட்டை பறிகொடுத்தாலும் டி கொக் - ரூஸோவ் இணைந்து வாணவேடிக்கை நிகழ்த்தினர். இவர்கள் கூட்டணியை பிரிக்க இந்திய பந்துவீச்சாளர்களால் முடியவில்லை.

13ஆவது ஓவரின்போது 68 ஓட்டங்கள் எடுத்திருந்த டி-கொக் ரன் அவுட் ஆனதால் இந்த இணை பிரிந்தது. இதன்பின் ரூஸோவ் தனது வாணவேடிக்கையை தொடர்ந்தார். சிக்ஸர், பௌண்ட்ரிகளை மாறி மாறி விளாசிய ரூஸோவ் 48 பந்துகளில் சதம் அடித்தார். அவரின் சதத்தின் உதவியுடன் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு தென்னாபிரிக்க அணி 227 ஓட்டங்களைக் குவித்தது.

228 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆட்டத்தின் இரண்டாவது பந்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ரபாடா வீசிய முதல் ஓவரில் இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா போல்ட் ஆகி வெளியேறினார்.

அதற்கடுத்த ஓவரிலேயே ஷ்ரேயாஸ் ஐயர் ஓர் ஓட்டத்துடன் நடையைக்கட்டினார். ரிஷப் பந்த் 27 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். வந்த முதல் பந்தில் இருந்தே அதிரடியை வெளிப்படுத்திய தினேஷ் கார்த்திக் மளமளவென ஓட்டங்களை குவித்தார். அதேநேரம் அவசரப்பட்டு விக்கெட்டையும் பறிகொடுத்தார்.

கேசவ் மகாராஜ் ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸரை பறக்கவிட்ட, ஸ்வீப் ஆட முயன்று போல்ட் ஆனார். 21 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் அவர் 46 ஓட்டங்கள் எடுத்திருந்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட சூர்யகுமார் யாதவ் ஒரு சிக்ஸர் மட்டும் அடித்துவிட்டு அடுத்த ஓவரே பெவிலியன் திரும்பினார். இப்படி, 8 ஓவர் முடிவில் அனைத்து முன்னணி வீரர்களின் விக்கெட்களை இழந்து இந்திய அணி தடுமாறியது.

இதன்பின் வந்தவர்களில் தீபக் சஹார் தவிர மற்றவர்கள் பெரிதாக சோபிக்கவில்லை. அவர் 31 ஓட்டங்கள் எடுத்தார். இறுதியில் 18.3 ஓவர்களில் இந்திய அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

தென்னாபிரிக்க அணி தரப்பில் டுவைன் பிரிட்டோரியஸ் அதிகபட்சமாக 3 விக்கெட் வீழ்த்தினார். (ஐ)

# வலைதளங்களில் பிரபலமாகும்! தீபக் சாஹரின் ‘அவுட்’ எச்சரிக்கை

இந்தூர், ஒக். 06

இந்தியா - தென்னாபிரிக்கா போட்டியில் முதல் இனிங்ஸில் பந்துவீசிய இந்திய வீரர் தீபக் சாஹர், தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர் டிரிஸ்டன் ஸ்டப்ஸூக்கு ‘மன்கட் அவுட்’ எச்சரிக்கை செய்தது வலைதளங்களில்

ஆட்டத்தின் 16வது ஓவரின் முதல் பந்தை தீபக் சாஹர் வீசிய போது பந்துவீசும் பக்கத்தின் எல்லையில் இருந்த டிரிஸ்டன் ஸ்டப்ஸ் அதிக தூரம் சென்றார். இதை கவனித்த தீபக் சாஹர் அவரை மன்கட் அவுட் செய்யப் போவதுபோல் காட்டினார். ஆனால், அவரை அவுட் ஆக்காமல் எச்சரிக்கையோடு விட்டு வைத்தார். இந்த சம்பவங்களை பார்த்துக்கொண்டிருந்த இந்திய அணித் தலைவர் ரோஹித் உட்பட பலரும் புன்னகையுடன் இந்த சுவாரஸ்யத்தை ரசித்தனர்.

சில தினங்களுக்கு லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து - இந்திய மகளிர் அணிகளுக்கு இடையேயான ஆட்டத்தில் 36 பந்துகளில் 17 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் ஒரு விக்கெட் மட்டுமே இங்கிலாந்து அணியின் கைவசம் இருந்தது. அப்போது பிரேயா டேவிஸ்ம், சார்லோட் டீனும் களத்தில் இருந்தனர். இந்தியாவின் தீப்தி சர்மா ஆட்டத்தின் 44ஆவது ஓவரை வீசும்போது அதை டேவிஸ் எதிர்கொண்டார்.

பந்துவீச்சு திசையில் முனையில் சார்லோட் டீன் இருந்தார். 44ஆவது ஓவரின் 3ஆவது பந்தை தீப்தி சர்மா வீச வந்தபோது சார்லோட் டீன், கிரீஸில் இருந்து நகர்ந்து சென்றுவிட்டார்.

இதையடுத்து அவரை தீப்தி சர்மா, மன்கட்அவுட் முறையில் ரன் அவுட் செய்துவிட்டார். இதற்கு நடுவரும் ஆட்டமிழப்பு கொடுத்துவிட்டார். இதையடுத்து இந்தியா வெற்றி பெற்றது.

எதிர்பாராத இந்த ரன்-அவுட்டால் சார்லோட் டீன், கண்ணீர் விட்டவாறே மைதானத்தில் இருந்து வெளியேறினார். இந்த சம்பவம் சர்ச்சையான நிலையில், தற்போது தீபக் சஹார் மன்கட் அவுட் எச்சரிக்கை விடுத்தது வைரலாகி வருகிறது. (ஐ)



# மட்டக்களப்பு செயலகத்தில் சிறப்புற நடந்த வாணி விழா

*மட்டக்களப்பு, ஒக். 06*

மட்டக்களப்பு மாவட்ட செயலக நலன்புரிச்சங்கம் நடாத்தும் வாணி விழா நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் நேற்று முன் தினம் மாவட்ட செயலகத்தில் மிகச்சிறப்பாக இடம்பெற்றது.

மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி. குணநாயகத்தின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற வாணி விழா நிகழ்வில் கடவுள் வாழ்த்து, மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பஜனை, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த் அவர்களின் வரவேற்புரையினைத் தொடர்ந்து, திருமதி.நித்தியா விக்னேஸ்வரன் நடனப்பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றிருந்தன.

அதனைத் தொடர்ந்து மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது தலைமையுரையும், மாணவர்களுக்கான "கலைவாணி" கல்வி உதவி வழங்கும் நிகழ்வும், திருமதி.நித்தியா விக்னேஸ்வரன் நடனப்பள்ளி மாணவிகளின் குழு நடனம், பேச்சு, ஆன்மீக சொற்பொழிவு என்பன இடம்பெற்றிருந்தன.

மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பிரத மகுரு சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்களினால் வாணி விழா பூசை வழிபாடுகள் நிகழ்த்தப் பட்டன.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த்,

காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன், மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திருமதி இந்திராவதி மேகன், உதவி மாவட்ட செயலாளர் ஏ. நவேஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.தயாபரன், மாவட்ட செயலக பொறியியலாளர் ரீ.சுமன், மாவட்ட செயலகத்தின் கிளைத்தலைவர்கள் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்னர். (அ)

# மட்டக்களப்பில் போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்று பணிபகிஷ்கரிப்பு!

## பிரதி முகாமையாளரை இடமாற்றக் கோரி

*மட்டக்களப்பு, ஒக். 06*

மட்டக்களப்பு இலங்கை போக்குவரத்துச் சபை பிரதி முகாமையாளரை இடமாற்றக் கோரி போக்குவரத்துசபையின் நடத்துநர்கள், சாரதிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் இணைந்து பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

4 தொழிற்சங்கங்கள் இணைந்து முன்னெடுத்த பணி பகிஷ்கரிப்பினால், நேற்று புதன்கிழமை அதிகாலை 4 மணிக்கு வெளிமாவட்ட மற்றும் குறுந்தூர பஸ் போக்கு வரத்து சேவை தடைப்பட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவால் கைது செய்யப்பட முன்னாள் முகாமையாளருடன் பிரதி முகாமையாளர் பல இலஞ்ச ஊழல் மோசடியில்



ஈடுபட்டு வருவதாகவும் 10 நடத்துநர்களை வேலையில் இருந்து பணிநீக்கம் செய்துள்ளதாகவும் சாரதிகள் மற்றும் ஊழியர் சங்கங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

அத்துடன், இது தொடர்பான ஆதாரங்களுடன் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

அத்துடன், தமக்கு நீதி கிடைக்கும்வரை இந்த பணி பகிஷ்கரிப்புப் போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் என தொழிற்சங்கத் தலைவர் துரைராஜா தெரிவித்தார். (அ)

# பொலிஸ் அலுவலர் பணி இடைநிறுத்தம்!

*கொழும்பு, ஒக். 06*

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களை விடுவிப்பதற்காக 10,000 ரூபா இலஞ்சம் பெற்ற முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரை கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பணி இடைநிறுத்தம் செய்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி முழங்காவில், கிருபாகரன் வீதிப் பகுதியில் பாலை மரங்களை வெட்டிக் கொண்டிருந்த இருவரை, குறித்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பல உத்தியோகத்தர்கள் கைது செய்திருந்ததுடன், மரக்குற்றிகளையும் மீட்டிருந்தனர். (அ)



## நல்லிணக்கம்,...

ஐக்கிய இராச்சியம், வட அயர்லாந்து, மொன்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா, கனடா, ஜேர்மனி, மலாவி நாடுகள் முன்வைத்த இந்த வரைவுக்கு அமெரிக்கா முழுமையான ஆதவை வழங்கி வருகிறது. இந்நிலையில், இந்த வரைவு தீர்மானத்தை அவுஸ்திரேலியா, சுவிற்சர்லாந்து உள்ளிட்ட 31 நாடுகள் அனுசரணை வழங்கியுள்ளன.

இன்று பேரவையில் சமர்ப்பிக்கப்படும் இந்த வரைவில், மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் ஆணையாளர் சமர்ப்பித்த வாய்மொழி புதுப்பிப்பு, அதன் தற்போதைய அமர்வில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை ஆகிய வற்றை தீர்மானம் வரவேற்கிறது. ஆணையாளர் அலுவலகம் மற்றும் மனித உரிமைகள் பேரவையின் உரையாடலைத் தொடர ஊக்குவிப்பதுடன், இலங்கை தொடர்பான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறது.

உணவுப் பாதுகாப்பின்மை, கடுமையான எரிபொருள தட்டுப்பாடு, அத்தியாவசிய மருந்துப் பற்றாக்குறை போன்ற வற்றின் விளைவாக பொருளாதார நெருக்கடியின் மனித உரிமைகள் தாக்கம் பற்றிய கவலையை வெளிப்படுத்துகிறது. இதேநேரத்தில் நாளாந்தம் ஊதியம் பெறுபவர்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் விசேட தேவையுடையவர்கள் உட்பட, மிகவும் பின்தங்கியவர்களின் உரிமைகளை மேம்படுத்தி, பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை தீர்மானம் வலியுறுத்துகிறது.

2022 ஏப்ரலின் பின்னர் போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சம்பவங்களுக்கு சுயாதீன விசாரணை அவசியம். அத்துடன் அரசாங்க செயல்பாடுகளை இராணுவ மயமாக்கலில் இருந்து பாதுகாத்தல்.

மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் பொறுப்பான நீதித்துறை - முக்கிய நிறுவனங்களின் சுதந்திரத்தை நிவர்த்தி செய்வது, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் குறைகள் மற்றும் கோரிக்கைகள், நீடித்த உள் இடப்பெயர்ச்சி, நில தகராறுகள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள், நினைவேந்தல் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்கள்மீது மேற்கொள்ளப்படும் கண்காணிப்பு, அச்சுறுத்தல் - துன்புறுத்தல் - பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையை எதிர்த்துப் போராட ஊக்கமளிக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் துஷ்பிரயோகங்கள் உட்பட அனைத்து தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறை.

சுயாதீனமான, பாரபட்சமற்ற மற்றும் வெளிப்படையான உள்நாட்டுப் பொறிமுறைகளின் நடைமுறை - மனித உரிமைகளின் பாரதூரமான மீறல்களுக்கான விசாரணைகள் - பொறுப்புக்கூறலை உறுதிசெய்தல்.

பொறுப்புக்கூறலை மேம்படுத்தும் நோக்கில் இலங்கையில் மனித உரிமைகள் மீறல், துஷ்பிரயோகங்கள் தொடர்புடைய குற்றங்களின் ஆதாரங்களை பாதுகாத்தல், பகுப்பாய்வு செய்வது மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின்கீழ் கடுமையான மீறல்களுக்கு உறுப்பு நாடுகளில், தகுதியான அதிகார வரம்புடன் ஒருங்கிணைக்கும் திறனை விரிவுபடுத்தவும் ஆணையாளரின் முடிவை தீர்மானம் அங்கீகரிக்கிறது, அர்த்தமுள்ள நல்லிணக்கம், அரசியல் அதிகாரப் பகிர்வு, மேம்பட்ட மனித உரிமைகள் மற்றும் நிலையான சமாதானத்தையும் தேட இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறது.

பலவந்தமாக காணாமல் போனோர் தொடர்பான பல வழக்குகளைத் தீர்ப்பது உட்பட, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிற பங்குதாரர்களால் எதிர்பார்க்கப்படும் உறுதியான முடிவுகள் இன்னும் எட்டப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் அவர்களின் தலைவிதி மற்றும் இருப்பிடம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பயனுள்ள மற்றும் சுயாதீனமான செயல்பாட்டின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள செயல்பாட்டை வலியுறுத்துவதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகிய வற்றின் பயனுள்ள மற்றும் சுயாதீனமான செயல்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

மனித உரிமை பாதுகாவலர்கள் உட்பட சிவில் சமூக செயல்பாட்டாளர்களைப் பாதுகாக்கும் அதேசமயம், அவர்கள் பழிவாங்கல் - அச்சுறுத்தல் இன்றி செயல்படும் சூழலை இலங்கை உறுதிப்படுத்த வேண்டும், பயங்கரவாத சட்டத்துக்கு பதில் சர்வதேச மனித உரிமைகளுக்கு உட்பட்டு புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

மனித உரிமைகள் பேரவையுடன் அரசாங்கம் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க ஊக்குவிக்கிறது, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலில் முன்னேற்றம் மற்றும் மனித உரிமைகள்மீதான பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழலின் தாக்கம் உட்பட இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமையை கண்காணித்து அறிக்கையிடுவதை ஆணையாளர் அலுவலகம் மேம்படுத்த வேண்டும்.

இன்றைய தினம் இந்த வரைவு வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. எனினும், இந்தத் தீர்மானத்தை இலங்கை எதிர்க்க முடிவு செய்துள்ளது. (ஐ)

## கண்ணீர் புகைக்...

சுருக்குவலை, வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல் போன்ற சட்டவிரோத மீன்பிடியை எதிர்த்தும், இந்த சட்டவிரோத செயலுக்கு துணைபோகும் அதிகாரிகளை மாற்றக் கோரியும் அந்தப் பகுதி மீனவர்கள் நீரியல்வளத் திணைக்கள பணிமனை அருகே முல்லைத்தீவு மாவட்டத்தின் 24 சங்கங்களை சேர்ந்த மீனவர்கள் கடந்த 3ஆம் திகதி முதல் போராடி வருகின்றனர். நேற்று மூன்றாவது நாளும் போராட்டம் தொடர்ந்தது. இந்தப் போராட்டத்தில் மீனவர்களின் பிள்ளைகளும் பாடசாலைக்கு செல்லாது சீருடையுடன் போராட்டத்தில் பங்கேற்றனர்.

மூன்று நாட்களாகியும் போராட்டத்தில் ஈடுபடும் தமக்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என்றுகூறி ஆத்திரமடைந்த மீனவர்கள் தமது படகுகள், வலைகளுக்கு தீ வைக்கும் போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர். அவர்களை பொலிஸார் தடுக்க முனைந்த நிலையில் ஒரு படகுக்கு தீயிடப்பட்டது. ஏனைய படகுகளுக்கு தீ பரவாமல் பொலிஸார் தடுத்தனர்.

இந்நிலையில், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் என்று குற்றஞ்சாட்டப்படும் தென்னிலங்கை மற்றும் கொக்கிளாய், சாலை பகுதிகளில் இருந்து மாத்தளனில் மீன்பிடியில் ஈடுபடும் முஸ்லிம், தமிழ் மீனவர்கள் சுமார் 300 பேர் நேற்று காலை முல்லைத்தீவு பேருந்து நிலையம் அருகே கூடி போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். அவர்கள், நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளை மாற்றக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்நிலையில், அதிகாரிகளை மாற்றக்கூடாது என்று கோரி போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்று கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்களுடன் முரண்படும் சூழல் உருவாகி வருவதை அவதானித்த பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி இரு சாராரும் நெருங்காதவாறு பார்த்துக் கொண்டனர். எனினும், அதிகாரிகளை மாற்றக்கூடாது என்று கோரிய போராட்டக்காரர்கள் தடைகளை உடைத்துக் கொண்டு தொடர் போராட்டம் நடத்தி வரும் மீனவர்களின் போராட்ட களத்துக்குள் நுழைய முயன்றனர்.

தடைகளை உடைத்துக் கொண்டு நுழைய முயன்ற மீனவர்களின் கூட்டத்தை பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசிக் கலைத்தனர். இதில், ஒருவர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும், அங்கிருந்து கலைந்து சென்ற அதிகாரிகளை மாற்றக்கூடாது எனக் கோரும் மீனவர்கள் மாவட்ட செயலகம் அருகே பந்தல் அமைத்து போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## உள்விவகாரத்...

மேலும், நீதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் உள்நாட்டு பொறிமுறை ஒன்று அமைக்கப்படும். அத்துடன், பிரிவினை கோராத வன்முறையை தவிர்க்கும் புலம்பெயர் தமிழ் குழுக்களுடன் இலங்கை பேச்சு நடத்தும்.

பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட்டு நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கும் விதமாக புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

பொருளாதார குற்றங்களுக்கு யாரேனும் பொறுப்புக் கூறினால் அவர்கள் மீது நாட்டின் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஆகவே, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள "பொருளாதார குற்றங்கள்" என்ற சொல்லை இலங்கை ஏற்றுக்கொள்ளவில்லை.

மனித உரிமைகள் பேரவையானது இலங்கையை முன்னோக்கி நகர்த்துவதற்கு இடமளிக்காமல் பலவந்தமாக இலங்கையை நிகழ்ச்சி நிரலில் வைத்திருக்கிறது. பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இலங்கைக்கு கல்வி கற்பிப்பதற்கான நிபுணத்துவம் மனித உரிமைகள் பேரவைக்கு இருந்தாலும் அது குறித்து சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் நிபுணர்களுடன் இலங்கை கலந்துரையாடி வருகிறது - என்றும் கூறினார். (ஐ)

## பாராளுமன்...

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,

தனது ஆணை நிராகரிக்கப்பட்டதை அரசாங்கமே ஏற்றுள்ளது. நாட்டின் தோல்வி என்பது பலவீனமான பாராளுமன்றம் இருப்பது மட்டுமல்ல நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை மற்றும் ஒட்டுமொத்த அமைப்பு முறையும்கூட. கடந்த 75 ஆண்டுகளாக ஒற்றையாட்சி அரசமைப்பு முறை உள்ளது. இது ஒரு மோசமான தோல்வியாகும்.

அரசாங்கம் மக்களின் ஆணையை இழந்து விட்டது. இதனால்தான் பிரதமரும் அதன் பிறகு ஜனாதிபதியும் பதவி விலகினார்கள். எனவே, இந்த சபை மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கவில்லை. இதை ஏற்க வேண்டும். இந்தப் பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். இது மக்களின் கோரிக்கைகளில் ஒன்று. இது இன்னமும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது - என்றார். (ஐ)

## மகாவலி...

மேலும், முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரதேசத்தில் கோட்டாபய கடற்படை முகாம் 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் உருவாக்கப்பட்டது. அரச மற்றும் தனியார் காணிகள் அடங்கலாக 671 ஏக்கர் நிலத்தை அங்கே கடற்படை தம் வசம் வைத்துள்ளது.

தனியார் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்த போதும் அதற்கு எந்தத் தீர்வும் இதுவரை கிடைக்கவில்லை. மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் போராட்டங்களால் அங்கு நில அளவை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட போதும் கொழும்பில் இருந்து செல்லும் அதிகாரிகளை கொண்டு அந்தக் காணிகளை அளந்து கையகப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது. இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 6 கிராம அலுவலர் பிரிவுகளை மீண்டும் மகாவலியுடன் இணைக்கும் முயற்சிகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. முன்னர் அமைச்சராக இருந்த சமல் ராஜபக்ஷவுக்கு விடுத்த கோரிக்கைக்கு அமைய அந்த நடவடிக்கைகளை அவர் இடைநிறுத்தியிருந்தார். ஆனால், மீண்டும் அந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்த பின்னர் எங்கள் கட்சியினர் அவரை சந்தித்தபோது அரசியல் கைதிகளின் விடுதலை, மகாவலி வலய விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கூறியிருந்தேன். அப்போது தனது செயலாளருக்கு அது தொடர்பில் அறிக்கையை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு கூறியிருந்தார். ஆனால், எதிர்வரும் நாட்களில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் குறித்த பகுதிகளை மகாவலியுடன் இணைக்க முயற்சிக்கப்படுவதாக தெரிய வருகிறது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை, ஸ்திரமற்ற அரசாங்கம் போன்ற தெற்கில் நெருக்கடி நிலைமைகள் இருக்கையில் வடக்கில் நிலங்களை தந்திரமாக அபகரிக்கும் செயல்பாடுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. இதனால் மகாவலி எல் வலயம் தொடர்பான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு ஜனாதிபதியும், அவரின் செயலாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன், அங்கு பூர்விகமாக உள்ள மக்களுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## 22ஆம் திருத்த...

சர் விஜயதாஸ ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம்அமைச்சுசார் ஆலோசனைக் குழு கூட்டம் கூடியது. இதிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

22ஆம் திருத்தத்தின் மூலம், ஜனநாயகத்தை உறுதிசெய்வதற்காக 19ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களுக்கு அப்பால் 22ஆம் திருத்தத்தில் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கமைய 19ஆவது திருத்தத்தில் உள்ளடக்கப்படாத விடயமான 41இ உறுப்புரைக்கு அமைய மத்திய வங்கியின் ஆளுநரை அரசமைப்புப் பேரவையின் ஒப்புதலின் பிரகாரம் ஜனாதிபதி நியமிப்பார் என்பது முக்கியமானது என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மேலும், 19ஆவது திருத்தத்தின் கீழ், நிறைவேற்று ஜனாதிபதி ஒருவருக்குப் பாதுகாப்பு, மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சு சம்பந்தப்பட்ட விடயங்களை வைத்திருப்பதற்கான அதிகாரம் 22ஆம் திருத்தத்தின் கீழ் பாதுகாப்பு விடயத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

(படம்: ஐ.சிவசாந்தன்)



# நல்லூரில் மானம்பூ உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக். 06

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விஜயதசமி-மானம்பூ உற்சவம் நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

நேற்றுக் காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் இடம்பெற்று குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி வெளிவீதி உலாவந்ததுடன் மானம்பூ உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது. (அ)

# இந்த ஆண்டில் இலங்கையரின் மதுபான பாவனை குறைந்தது!

கொழும்பு, ஒக்.06

2021 ஆம் ஆண்டை விட 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் மது பாவனையில் குறிப்பிடத்தக்க குறைப்பு பதிவாகியுள்ளதாக தேசிய போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் 2021 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 215 மில்லியன் லீற்றர் மதுபானம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்த பிரிவின் உப தலைவர் நளீன் அமரசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த வருடம் ஜனவரி முதல் ஜூலை வரை மக்கள் 120 மில்லியன் லீற்றர் மதுபானங்களை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளதாக நளீன் அமரசிங்க கூறினார்.

அடுத்த ஆண்டு சர்வதேச அமுத தினத்தின் போது மது பாவனை கணிசமான அளவு குறைக்கப்படும் என அமரசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

கண்டியில் கடந்த திங்கட்கிழமை சர்வதேச மது விலக்கு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வுகளில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

# வீடொன்றில் இருந்து ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு, ஒக்.06

அநுராதபுரம் எலயாபத்துவ பகுதி வீடொன்றில் உயிரிழந்திருந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய எலயாபத்துவ யாலேகம பகுதிக்கு விரைந்த பொலிஸார் வீடொன்றுக்குள் உயிரிழந்திருந்த நிலையில் இருந்த சடலத்தை பிரதேச வாசிகளின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

எலயாபத்துவ யாலேகம பகுதியை சேர்ந்த 68 வயதுடய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் .

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு சென்ற அநுராதபுரம் நீதவான் சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதணைகளுக்காக சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் எலயாபத்துவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சர்வதேச அழுத்தம் மூலம் தமிழர்களுக்கு தேவையானவற்றை பெற்றுக்கொடுங்கள்

## யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணன் நியூசிலாந்து தூதுவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 06

சர்வதேச அழுத்தம் மூலம் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுங்கள் என யாழ். மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் நியூசிலாந்து நாட்டுத் தூதுவரிடம் கோரிக்கை முன்வைத்தார்.

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் நியூசிலாந்து நாட்டுத் தூதுவர் மிச்சல் அபேல்டன் ஆகியோருக்கு இடையில் சந்திப்பு யாழ். மாநகர சபையில் நேற்று புதன் கிழமை இடம்பெற்றது.

இந்த சந்திப்பின்போது ,உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலும்,யாழ்.மாநகர சபையின் கட்டமைப்பு மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் தூதுவர் விரிவாக கேட்டறிந்து கொண்டார்.

இதன் போது மாநகர முதல்வர்,

சர்வதேச அழுத்தம் மூலம் தமிழ் மக்களுக்கு தேவையான விடயங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

பொருளாதார பிரச்னைக்கு புலம் பெயர் உறவுகள் உதவி செய்வதற்கு தயாராக உள்ளனர். தமிழ் மக்களுக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வை அழுத்தங்கள் மூலம் பெற்றுத் தரவேண்டும். அரசால் நிர்மூலமாக்கப்பட்ட கட்டடம் இப்போது பொருளாதார பிரச்னையால் இடை நடுவே நிற்கிறது. அதனைச் சீர் செய்வதற்கு உதவி செய்யவேண்டும்.

இந்திய நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபம் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டு அதன் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும். அதேபோன்று பலாலி விமான நிலையம் மக்கள் பாவனைக்கு விடப்படவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளையும் மாநகர முதல்வர் தூதுவருக்கு முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட தூதுவர் யாழ். பொது நூலகம் உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத் தக்கது. (அ)

# நவீன தொழில்நுட்பத்தை கற்றுக்கொள்ளவேண்டும்

## சபாநாயகருக்கு கிரியெல்ல அறிவுரை

கொழும்பு, ஒக். 06

கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் நீங்கள் நிகழ்நிலையிலேயே நடத்தினீர்கள். அதனால் நவீன தொழிநுட்பங்களை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் சபையில் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் ஒழுங்குப் பிரச்னை ஒன்றை எழுப்பி, லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிக்கையில்-

எமது உறுப்பினர்கள் பல வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். அதனால் கோப் மற்றும் கோபா குழுக்களுக்கு தலைவர்கள் தெரிவு தொடர்பில் வாக்கெடுப்பு நடத்துவதாக இருந்தால், நிகழ்நிலை முறையில் நடத்தவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதற்குச் சபாநாயகர் அவ்வாறு வாக்களிப்பு நடத்துவதற்கு நிலையியற் கட்டளையில் எந்த ஏற்பாடும் இல்லை. அவ்வாறு இருந்தால் நிலையியற் கட்டளையில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும் என கூறினார்.

அதற்கு லக்ஷ்மன் கிரியெல்ல பதிலளிக்கையில்,

நிலையியற் கட்டளையில் அதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. கைகளை உயர்த்தியும், இலத்திரணியல் அடிப்படையிலும் குரல் வழியாகவும் வாக்களிப்பு நடத்த ஏற்பாடு இருக்கின்றது.

அதேபோன்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தையும் நீங்கள் நிகழ்நிலையிலேயே நடத்தினீர்கள். அதனால் நவீன தொழிநுட்பங்களை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்-என்றார்.

அதற்கு சபாநாயகர், சபை இணக்கம் தெரிவித்தால் நிகழ்நிலையில் வாக்களிப்பு நடத்த தயார். இது தொடர்பில் எனக்கு தீர்மானிக்க முடியாது என்றார். (அ)

**VACANCY**

ACCOUNTS ASSISTANT

A group of companies engaged in Media, Communications, Network and publications looking for an Accounts Assistant in Jaffna District.

Candidate should have passed part II of AAT or finalist, CIMA/ACA II stages with at least 2 years Audit experience. Basic English knowledge an added advantage.

Abilities to operate MS Word, Excel and accounting packages a must.

Attractive remuneration and Allowances offered to the right candidate.

**Send your CV with recently captured photo to Email: johnny@askcable.lk**

# பல்கலைக்கழகங்களில் பல்வேறு கொடுமைகள்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, ஒக். 06

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு அப்பாற்பட்ட கொடுமைகள் இடம்பெறுகின்றன. பல்கலைக்கழக மாணவர்களினதும்,பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் வேந்தர்களின் உரிமையை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும், அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தெரிவித்தார்.

சபாநாயகர் தலைமையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவை பதவி விலக்கிய எமக்கு வேந்தரை பதவி விலக்கச் செய்வது பெரிதொரு விடயமல்ல என பேராதனை பல்கலைக்கழகத்தில் ஒரு பிரிவினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழக வேந்தர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதைக்கு அப்பாற்பட்ட பல கொடுமைகள் இடம்பெறுகின்றன. பல்கலைக்கழகத்துக்குள் அடிப்படைவாதம்,பாசிஷவாதம் உள்ளிட்ட பல முறையற்ற செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவன் கைக்கடிகாரம் அணிந்துக் கொண்டு பல்கலைக்கழகத் துக்கு வரக்கூடாது. முதலாம் ஆண்டு மாணவி சீத்தை துணியிலான ஆடை அணியவேண்டும், காதணி, மாலை ஆகியவற்றை அணியக்கூடாது என பகிடி வதைகள் இடம்பெறுகின்றன.

ஜனநாயகம் தொடர்பில் பலர் தமக்கு ஏற்றால் போல் வரைவிலக்கணம் செய்துக்கொள்ளலாம்.வீடுகளை எரித்து,வன்முறைச் சம்பவங்களில் ஈடுப்பட்டவர்களை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய பின்னர் அவர்களுக்கு ஒரு மணித்தியாலத்தில் பிணை வழங்கப்பட்டதை கைதட்டி வரவேற்றமை ஜனநாயகம் அல்ல.

பல்கலைக்கழக மாணவர்கள்,விரிவுரையாளர்கள் மற்றும் பல்கலைக்கழக வேந்தர்கள் ஆகியோரின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சுக்கு உண்டு,அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.10.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.